நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி


REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA


PUTHIYA POOMI

පුදියපූමි

சுற்று 06 ஜனவரி 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 25


**வடமேல் மாகாணசபைத் தேர்தலில்**
**புதிய இடதுசாரி முன்னணிக்கு வாக்களியுங்கள்**





# இ.தொ.கா. வின் எதிர்ப்பு வெறும் ஏமாற்று வித்தை

**ஐ.தே. கட்சியின் பேரினவாதத்தை எதிர்ப்பதாக இ.தொ.கா முன்னெடுத்து வரும் பிக்கட்டிங் போன்ற நடவடிக் கைகள் நேர்மையானதாக இருந்தால் இனி ஒருபோதும் ஐ.தே.கட்சியுடன் இ.தொ.கா கூட்டுச் சேராது என்று தாத்தா தொண்டமானும் பேரன் தொண்டமானும் அறிவிப்பார்களா? இனி ஒருபோதும் ஐ.தே.கட்சிக்கு வாக்களிக் கும்படி மலையகத் தமிழ் மக்களை இ.தொ.கா கேட்காது என்று உறுதியளிப்பார்களா?**



தோட்டப்புற உள்ளகத் கட்டமைப்பு அமைச்சின் நிதிஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் தோல்வியடைந்த பிறகு அதற்கு காரணமான ஐ.தே.கட்சி மீது கண்டனங்களை தெரிவித்து இ.தொ.கா சாம்பியன்கள் நடத்திவரும் எதிர்ப்பியக்கங்கள் உண்மையில் மலையகத் தமிழ் மக்களின் நலன் சார்ந்ததாக இருப்பின் ஐ.தே.கட்சிக்கும் மலையகத் தமிழ் மக்களுக்கும் எவ்வித ஒட்டுறவையும் இல்லாமலாக்கும் அரசியலையே இ.தொ.கா. முன்னெக்க வேண்டும். மலையகத் தமிழ் மக்களுக்கு எதிராக ஐ.தே.கட்சி முன்னெடுத்து வந்த நிலைப்பாடுகளில் இன்னொரு நடவடிக்கையே இந்த தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டுக்கு எதிரான நிலைப்பாடாகும்.

## யூ.என்.பி. மீண்டும் பதவிக்கு வந்தால் தொண்டமான் என்ன செய்வார்?

இருந்தும் ஐ.தே.கட்சிக்கு எதிராக இ.தொ.கா புதிதாக கூப்பாடு போடுகிறது. ஐ.தே.கட்சியில் இருக்கும் சகல மலையகத் தமிழ் பிரமுகர்கள் ஐ.தே.கட்சியை இனவாத கட்சியல்ல என்று அதற்கு வெள்ளையடிக்க முயற்சிக்கிறார்கள். தொண்டமானின் அமைச்சான தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பு அமைச்சுக்கான நிதிஒதுக்கீடு குழுநிலையில் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அரசாங்க தரப்பு எம்.பீக்களில் அதிகமானோரும், இ.தொ.கா எம்பீக்கள் ஒன்பது பேரும் சபையில் இருந்திருந்தால் அந்நிதிஒதுக்கீடு தோல்வியடைந்திருக்காது என்பதை மறைக்கும் விதத்தில் இ.தொ.காவினர் என்றுமில்லாதவாறு ஐ.தே.கட்சியின் மீது கோபத்தை காட்டிவருகின்றனர். அவ்வேளை ம.ம.முன்னணி தலைவரும் பிரதியமைச்சரான பெ.சந்திரசேகரனும் சபையில் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நிதிஒதுக்கீடு தோல்வியடைந்ததை இ.தொ.கா இவ்வளவு பெரிது படுத்தியிருக்க வேண்டிய அவசிய



மில்லை. ஏனெனில் குறைநிரப்பு நிதி பிரேரனை ஒன்றை கொண்டுவந்து சாதாரண பெரும்பான்மையால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் படுமானால் அந்நிதிஒதுக்கீடு நிறைவேற்றப்படும். இ.தொ.கா இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஐ.தே.கட்சிக்கு எதிரான பிரசாரத்தை தீவிரமாக முன்னெடுத்து தனது செல்வாக்கை நிலைநாட்ட பிரயத்தனம் செய்கிறது.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தம்

## உள்ளூர் உற்பத்திக்கு நாசம்! மேலாதிக்கத்தை வலுப்படுத்தும்!

கடந்த மாதம் 28ம் திகதி புது டெல்லியில் இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இலங்கை இந்திய நாடுககளுக் கிடையிலான இவ் வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவே ஆகக் கூடுதல் பலாபலன்களை அடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதேவேளை இலங்கையின் எஞ்சியுள்ள உள்ளூர் விவசாய உற்பத்தியும் துணி நெசவு உற்பத்தியும் நாசமடையவே செய்யும். ஏற்கனவே பெருந்தோட்டத்துறையில்



மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டாம்!

இந்தியக் கம்பனிகள் புகுந்து கொண்டதன் மூலம் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமைகளுடன் தேயிலை ஏற்றுமதியிலும் குளறுபடிகள் காணப்படுகின்றன. இந்நிலையில் சுதந்திர வர்த்தக இறக்குமதியின் மூலம் உள்ளூர் உற்பத்திகள் நின்று பிடிக்க முடியாது அழிந்து போகும் நிலையே உருவாகும். உதாரணமாக மிளகாய் வெங்காயம் உருளைக் கிழங்கு மற்றும் தானிய வகைகள் போன்றவற்றை நமது நாட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் போது செலவிடும் உற்பத்தி செலவை சந்தைப்படுத்தலின் மூலம் பெறமுடியாது திண்டாட வேண்டியே உள்ளது. அதேவேளை இதே பொருட்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதியாக்கும் போது அவற்றுடன் எவ்வகையிலும் போட்டியிடமுடியாத நிலையே உருவாகும். இது ஏற்கனவே இடம் பெற்றுவரும் ஒன்றாக இருந்த போதிலும் மேற்படி ஒப்பந்தம் இந்நிலையை மேலும் மோசமடையவே செய்யும்.

இவ்வாறு பொருளாதார ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ளும் இந்தியா அதன் ஊடாகத் தனது அரசியல் ஆதிக்கத்தை உள்ளூர உறைந்து காணப்படும் பிராந்திய மேலாதிக்க நடைமுறை களை வேகப்படுத்தியே கொள்ளும். இலங்கை .அரசாங்கம் இனப்பிரச்சினையின் மீது இந்தியாவின் கவனம் திரும்பாது இருப்பதற்கு இவ் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவை ஆசுவப்படுத்தியுள்ளதாக நம்புகின்றது. ஆனால் இந்தியா ஒன்றின் பின் ஒன்றாகத் தனது காய்களை நகர்த்தவே செய்யும். அதன் ஆதிக்கப் போக்கையும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் இலங்கை அனுபவிக்க வேண்டியே ஏற்படும்.

இவ் ஒப்பந்தத்தின் மூலம் ஜனாதிபதி சந்திரிகா புதிதாகவோ பெரிதாகவோ எதையும் சாதித்து விடவில்லை. யூ.என்.பி–ஜே.ஆர் தொடக்கி வைத்த திறந்த பொருளாதாரம் தனியார்மயம் பல்தேசியக் கம்பனி ஆதிக்கம் என்பனவற்றை விரிவுபடுத்தும் வேலையைத்தான் செய்துள்ளார். இதில் யூ.என்.பிக்கும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் வேறுபாடு கிடையாது. அதனாலேயே யூ.என்.பி இவ் ஒப்பந்தத்தை உடனடியாகவே வரவேற்றுக் கொண்டது. ■

### '80 யூலையில் பறிக்கப்பட்ட வேலை

1980ம் ஆண்டு யூலை வேலை நிறுத்தத்தில் வேலை இழந்தோரில் இன்னும் ஏழாயிரம் பேருக்கு வேலை வழங்கப்படவில்லை. அவர்கள் கடந்த ஒரு மாதமாக கொழும்பு கோட்டைப் புகையிரத நிலைய முன்பாக தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்களது கோரிக்கையை அரசாங்கம் உதாசீனம் செய்து வருகிறது. 27 அமைச்சர்களைச் சபித்து 27 தேங்காய் உடைத்து உண்ணா விரதிகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

### நூறு தமிழ் கிராம சேவகர்கள்

மலையகத்தில் நூறு தமிழ் கிராம சேவகர்கள் நியமனத்திற்கு எதிராக மலையக சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் ஐந்து லட்சம் கையெழுத்துக்களைச் சேகரித்து வருகிறது. அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது.

### கூட்டு நடவடிக்கை குழு

யுத்தத்தை மேலும் ஒழுங்குபடுத்தி முன்னெடுக்க கூட்டு நடவடிக்கை குழு (Joint Operation Bureau) முன்னாள் ராணுவத் தளபதி றோகான் தளுவத்தை தலைமையில் இயங்க உள்ளது. ஆயுதப்படைகளின் சகல பிரிவு களையும் ஒன்றிணைத்து வழி நடாத்த உள்ள இக்குழு பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்குமாம்.

### வேலையற்ற பட்டதாரிகள்

நாட்டில் முப்பதினாயிரம் பட்டதாரிகள் வேலையற்று இருக்கிறார்கள். கண்டியில் வேலையற்ற பட்டதாரிகள் இரண்டு மாதங்களாக தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். ஆனால் அரசாங்கம் எதனையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

### 10 தொழிலாளர் தற்கொலை

காங்கேசன்துறை சீமெந்து ஆலை 1991 இராணுவ நடவடிக்கையால் மூடப்பட்டது. அன்றிலிருந்து வேலையற்ற தொழிலாளர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதுவரை அவர்களில் 10பேர் விரக்தியால் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

### வடக்கும் கிழக்கும்

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கடும் பகிடிவதைக்கு ஆளாக்கப்பட்ட புதிய மாணவன் விருத்தாசலம் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். அதேவேளை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் செம்மணிப் புதைகுழிகளைத் திறக்க கோரி கையெழுத்து இயக்கம் நடாத்தி ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தில் கடைச்சிப்பந்திகள் கடுமையாகச் சுரண்டப்படுகின்றனர்

மலையக நகரங்களில் கடைச் சிப்பந்திகள் ஊழியர்கள் மிகக் கடுமையாக வேலை வாங்கப் படுகின்றனர். பெரும்பாலான கடைகளில் வியாபார இடங்களில் பன்னிரண்டு பதினைந்து மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது. மிகக் குறைந்த சம்பளம் ஓய்வின்றிய வேலை. வாரத்தில் ஒரு நாள் கட்டாயம் கடையை மூடி சிப்பந்திகளுக்கு விடுமுறை கொடுக்கப்படல் வேண்டும் என்னும் சாப்புச் சட்டம் முதலாளிகள், உரிமையாளர்களினால் தூசாக மதிக்கப்படுகிறது. ஸ்ரொக் எடுக்கிறோம், கணக்குப் பார்க்கிறோம் என்னும் சாக்குப்போக்கு கூறி சிப்பந்திகளைக் கொண்டு வியாபாரம் நடாத்திக் கொள்கின்றனர். இதில் ஒரு சிலர் மனிதாபிமானத்துடன் செயற்பட்ட போதிலும் பெரும் பாலான வியாபார நிலையங்களில் சாப்புச் சட்டத்தை மீறி வேலை வாங்கப்படுகிறது.

இத்தனைக்கும் சிப்பந்திகளுக்கு குறைந்த சம்பளம். அத்துடன் கடைச் சிப்பந்திகளுக்குரிய சேமலாபநிதி, அல்லது ஊழியர் நம்பிக்கை நிதி எதுவுமே கழித்துக் கட்டப்படுவதில்லை. காரணம் எல்லோரையும் தற்காலிக காசுவல் சிப்பந்திகளாகவே வைத்து வேலை வாங்குகின்றனர். ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக வேலை செய்யும் எந்தவொரு நிறுவனமோ அல்லது வியாபார நிலையமோ தனது ஊழியர்களை நிரந்தரமானவர்களாகக் கொண்டு அவர்களுக்கு வரையறுக்கப்பட்டபோன்றவற்றை ஒழுங்காகவும் சட்டப்படியும் வழங்க வேண்டும். இதனை 1954ம் ஆண்டு ஊழியர் சட்டம் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. அதேபோன்று 1986ம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் படி வழங்கவேண்டிய கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை.

இவை பொதுவாக மலையக நகர்களில் வியாபார நிலையங்களில் தொடர்ந்தும் பின்பற்றப் படுபவையாகும். உதாரணத்திற்கு ராகலை நகரில் ஒரு குறிப்பிட்ட சில கடைகளைத் தவிர ஏனையவற்றில் சிப்பந்திகள் என்போர் மாடுபோல் வேலை வாங்கப்பட்டு சக்கை பிழியப்படுகின்றனர். இத்தகைய சுரண்டலையும் ஏமாற்றையும் தடுத்து நிறுத்த வேண்டிய சம்பந்தப்பட்ட அரச திணைக்கள உத்தியோகத்தவர்கள் தமக்குரிய பங்கினை தகுந்த முறையில் கடை உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு திரும்பியே பார்க்காது செல்கின்றனர். இத்தகைய நிலை தொடர்வதால் கடைச் சிப்பந்திகளும் ஊழியர்களுமே தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் வெறும் உழைப்பைக் கொடுக்கும் யந்திரங்கள் போன்று வாழ் நாள் பூராவும் ஓய்வு இன்றி வேலை செய்து வாழ்வதற்கு தேவையான எதையும் பெறமுடியாது போக வேண்டியே உள்ளது. எனவே இந்த அநீதி உடன் நிறுத்தப்படவேண்டும். இதற்கு எல்லோரினதும் ஒத்துழைப்பு அவசியம்.

இராகலை மார்க்ஸ்

# காங்கேசன் முதல் களுத்துறை வரை சிறைக் கூடங்களில் இளைஞர் யுவதிகள்

இன்று முழு நாடுமே சிறைக் கூடமாகவும் சித்திரவதை முகாம் போலவும் காட்சி தருகின்றது. வீதிகளில் நடமாடுவதும் வீடுகளில் வசிப்பதும் கூட அச்சம் பயப்பீதியுடன் தான். எந்த நேரமும் எவருக்கும் எதுவும் நடக்கலாம். அடிப்படையான உயிர்வாழும் உரிமையே மிகுந்த கேள்விக் குறியுடன் தான் காணப்படுகின்றது.

வடக்கு கிழக்கு யுத்தம் தந்து கொண்டிருக்கும் உயிர் அழிவுகள் உடமை இழப்புகள் இடப் பெயர்வுகள் இவற்றுடன் கூடிய விபரிக்க முடியாத துன்பதுயரங்கள் நீடித்துச் செல்கின்றன. இவையனைத்தையும் சுமந்து தாங்கி தமது வாழ்வுப் பயணத்தை திசையறியாப் பாதையில் தமிழ் மக்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். அத்தகைய துன்பங்களில் மிகப் பெரும் துன்பமாக இருப்பதே சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்ட தமிழ்ர்களின் துன்ப நிலையாகும்.

இவ்வாறு சிறைகளில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் யுவதிகளாவர். இவர்கள் நாடு முழுவதிலம் உள்ள பல்வேறு சிறைச்சாலைகள் தடுப்பு முகாம்கள், பொலீஸ் நிலையங்களில் இருந்து வருகிறார்கள். காங்கேசன் துறை தடுப்பு முகாம் தொட்டு களுத்துறைச் சிறைச்சாலை வரை, கண்டி போகம்பரை சிறைச்சாலை முதல் வெலிக்கடை சிறைச்சாலை ஈறாக தமிழர்கள் அடைக்கப் பட்டுள்ளனர். இவர்களில் வடக்கு கிழக்கு மலையகத்தைச் சேர்ந்தவர் களே அதிகமாக உள்ளனர். கொழும்பையும் நாட்டின் ஏனைய பிரதேசங்களையும் சேர்ந்த தமிழர்கள் மட்டுமின்றி முஸ்லீம் இளைஞர்களும் சிறையில் இருந்து வருகின்றனர். ஒரு சில சிங்கள இளைஞர்களும் கூட சந்தேகத்தின் பேரில் இச் சிறைகளில் இருந்து வருகின்றனர்.

இலங்கையில் இளைஞர்கள் யுவதிகள் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டு பல்வேறு உடல் உள சித்திரவதைகளுக்கு ஆளாகி வந்திருப்பது இன்று நேற்றல்ல. 1971ம் ஆண்டிலிருந்தே இது நடைபெற்று வருகின்றது. ஆனால் இன்று பெருமளவிற்கு தமிழ் இளைஞர் யுவதிகளே இலங்கையின் சிறைச்சாலைகளில் அடைக்கப் பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டம் என்னும் கொடிய சட்டத்தின் கீழ் காலவரையின்றி ஒருவரைத் தடுத்து வைக்க முடியும். ஒப்புதல் வாக்குமூலம் என்ற பெயரில் ஒன்றைக் காரணம் காட்டி எத்தனை ஆண்டுகளாயினும் விசாரணை இன்றி சிறையில் வைத்திருக்கலாம்.

இவ்வாறு தான் இன்று நாட்டின் பல்வேறு சிறைகள் தடுப்பு முகாம்களில் புலிகள், பயங்கரவாதிகள் அல்லது அவர்களுக்கு உதவியோர் என்ற சந்தேகத்தின் பேரில் பெரும் தொகையானவர்கள் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களின் சரியான தொகை உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப் படவில்லை. ஆனால் குத்து மதிப்பாக மூவாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பல்வேறு சிறைகளிலும் இருப்பதாகவே நம்பப்படுகிறது. களுத்துறைச் சிறையில் மட்டும் தொளாயிரத்திற்கு மேற்பட்டோர் இருக்கின்றனர். இவர்களுக்கு விசாரணையும் இல்லை விடுதலையும் இல்லை என்ற அவல நிலை தான் நீடித்து வருகின்றது.

சிலைச்சாலைகளில் தடுப்பு முகாம்களில் இவ்வாறு இருந்து வருவோர் அனுபவிக்கும் வேதனைகள் விபரிக்க முடியாதவை களாகும். ஏற்கனவே வெலிக்கடை களுத்துறைச் சிறைச்சாலைகளில் துடைத்தெறிய முடியாதவாறு இடம் பெற்ற கறை படிந்த சிறைக் கொலைகளை முழு உலகமுமே அறியும். இன்னும் அத்தகைய பேரினவெறித்தனம் இடம் பெறமாட்டாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது.

சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் பெரும் பகுதி சிறை வாழ்வாகிக் கொண்டே செல்கிறது. உணவு, உடை, சுகாதாரம், வைத்தியம் போன்றவற்றில் பற்றாக்குறையும் பாகுபாடும் காட்டப் படுகிறது. அவர்களின் உடல் உளம் மோசமாகப் பாதிப்படைந்து காணப்படுகிறது. உறவினர்களைச் சந்திக்க முடிவதில்லை. போக்குவரத்து இன்மை, பாதுகாப்புக் கெடுபிடி என்பனவற்றால் தமது பிள்ளைகளை உறவினர்களை சிறைச்சாலைகளில் சென்று காணமுடியவில்லை. இதனால் அவர்களுக்குரிய சட்ட உதவிகளைச் செய்ய இயலவில்லை. ஓரளவுக்கு வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் மட்டுமே ஆட்கொணர்வு மனுவைத் தொடர முடிகிறது. ஏனையயோர் எந்த வித நம்பிக்கையும் அற்ற விரக்தி நிலையிலேயே உள்ளனர். அதனாலேயே அடிக்கடி சிறைச்சாலை உண்ணாவிரதம் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளது.

இன்று நாடு முழுவதிலும் அடைத்து வைக்கப்பட்டவர்களின் நியாயமான கோரிக்கையாக முன்னெடுழுந்து நிற்பது விசாரணை 'செய் அல்லது 'விடுதலை செய் என்பதாகவே உள்ளது. இது முற்றிலும் நியாயமான கோரிக்கையேயாகும். இதனைச் சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவி நீடிப்பிற்கு உரிய ஒன்றாக எடுத்து அது செய்கிறோம் இது செய்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்து வருகின்றனரே தவிர உருப்படியாக எதுவும் இதுவரை இடம் பெறவில்லை. எனவே பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குறுதிகளை நம்பிக் காத்திருப்பதைவிட வெளியே ஒரு பரந்த மக்கள் இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும். யுத்தத்தை நிறுத்து, பேச்சுவார்த்தையை நடாத்து, நியாயமான அரசியல் தீர்வைக் காண். என்று ஏற்கனவே இடம் பெற்றுவரும் வெகுஜனப் போராட்ட இயக்கத்தில் சிறையில் உள்ளவர்களை விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்னும் கோரிக்கையையும் இணைத்து முன்னெடுக்க வேண்டும். அதுவே அரசாங்கத்திற்கு அதிக நிர்பந்தத்தைக் கொடுக்கக் கூடியதாகும். ■

# நாலும் நடக்கும் உலகிலே

## அரசாங்கம் அடிமைச் சாசனம் எழுத ஆயத்தமாகிறதா?

இலங்கையில் வேலையின்மையைப் போக்குவதாயின் அந்நிய முதலீட்டை ஊக்குவிப்பதைவிட வேறு வழி இல்லை என்று மாத்தறையில் பேசிய சந்திரிகா குமாரதுங்க மாற்று வழி இருந்தால் சொல்லும்படி மற்றைய அரசியற் கட்சிகட்கு சவாலும் விட்டிருக்கிறார்.

அந்நிய முதலீட்டின் மூலம் எந்த மூன்றாமுலக நாட்டில் வேலையின்மை தீர்ந்திருக்கிறது என்று அவர் சொல்லுவாரா?

அந்நிய மூலதனம் நுழைந்த ஒவ்வொரு நாட்டினதும் கதியை அவர் சொல்லுவாரா?

உலக வங்கிக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இந்த நாட்டை ஆளும் அதிகாரத்தை வழங்குவதில் யூ.என்.பியை மிஞ்சுவது தான் சந்திரிகாவின் இலட்சியம் போல தெரிகிறது.

நல்ல வேளை, போரை விட நாட்டின் வேலையின்மையைத் தீர்க்க வழியில்லை என்று சொல்லாமல் விட்டாரே என்று நினைக்கிறீர்களா? ஆயுத விற்பனை என்பது உலகப்பொருளாதாரத்தின் முக்கியமான ஒரு பகுதியல்லவா. எனவே உலக வங்கி போர்கள் ஒழிவதை விரும்பாது. உலக வங்கி போர்களின் தேவையை வலியுறுத்தினால் நமது சனாதிபதியும் உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு நமது நாட்டின் பங்கு பற்றிப் பெருமைப்படத் தயங்கமாட்டாரென்று நம்பி இருக்கலாம்.

## இன்னொரு பழைய பூக்கடை

இந்த நாட்டின் சுதந்திரத்துக்கான முதலாவது வெகுஜன இயக்கம் காகிதத்திலான சிவத்த 'பொப்பி' மலர்களை விற்று ஓய்வு பெற்ற பிரித்தானியப் படையினருக்கு இந்த நாட்டின் பணம் சேர்க்கும் முயற்சிக்கு எதிரான இயக்கமாகும். பொப்பி மலர்கட்கு எதிராகச் சூரிய காந்தி விற்பனையுடன் தொடங்கிய இயக்கமே இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சிக்கு வித்திட்டது. அந்தச் சூரியகாந்தி இயக்கத்தின் வாரிசுகள் தாமே என்று உரிமை கோருகிற சமசமாஜக் கட்சி, போன ஆண்டு சூரியகாந்தி இயக்கம் என்று பூக்கடை விரித்தது. வியாபாரம் தலையெடுக்க முன்னமே படுத்து விட்டது. ஏகாதிபத்தியத்தின் குறியீடாக இருந்த பொப்பிப் பூக்களை இன்று இந்த அரசாங்கம் நவெம்பர் முதல் வாரத்தில் விற்றுத் தன் போரின் விளைவாக ஊனமுற்ற படையினருக்குப் பணம் சேர்க்கிறது. கொலனி எசமானர்கள் போய் ஐம்பது வருடம் பின்பு கொலனி எசமானர்களின் சின்னம் இந்த மண் மீது மீண்டும் பரவிப் படர்கிறது. அரசாங்கம் இந்த நாட்டையே நவ கொலனியத்திடம் அடகு வைத்து பின்பு இதென்ன பெரிய விடயம் என்று யாராவது கேட்கலாம். கம்யூனிஸ்ட் கட்சி என்று தன்னை அழைத்துச் கொள்கிற கூட்டமும் சமசமாஜக் கட்சியின் மிச்ச சொச்சங்களும் சிவப்புப் பொப்பிப் பூ விற்கும் சிவப்பு அரசியலை அவர்கட்கு மனமிரங்கி வழங்கியதற்காக சந்திரிகா குமாரதுங்கவுக்கு நன்றி கூறுவார்களாக.

## சவப்பெட்டி எழுத்தாளர் சங்கம்

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்பது 1960களின் பிற்பகுதியில் வரவர மாமியார் கழுதைபோல் ஆனார் என்றாகி அடுத்த தசாப்தத்தில் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி 1977 தேர்தலின் பின்பு வெறும் பெயர்ப்பலகைச் சங்கமாகவே இருந்தது. ஆனாலும் யாருடைய காலையாவது பிடித்து தடபுடலாக ஒரு ஆண்டு விழா நடத்தும் திறமை மட்டும் அதன் சொந்தக்காரர்கட்கு இருக்கிறது. கம்யூனிஸ்ட் என்ற பெயருக்கு சோவியத்சார்பு கட்சிக்காரர்கள் தேடிய இழுக்குக்குச் சிறிதும் குறைவு இல்லாத விதமாக முற்போக்கு இலக்கியம் என்ற பேருக்கு அந்தப் பேரின் பின்னால் இருந்த சங்கக்காரர்கள் இழுக்குத் தேடிக் கொடுத்தார்கள். மு.போ.எ.சவுடன் ஒட்டியிருந்த பேராசிரியர் சிவத்தம்பி சென்ற ஆண்டு மு.போ.எ.ச ஒரு பிணம் என்றும் அதைப் பழுதுபடாமல் பாதுகாக்கிற வேலைதான் நடக்கிறது என்றும் கூறியிருக்கிறார்.

இப்போது அவரே போய் அந்த மு.போ.எ.சங்கத்தின் தலைமைப் பிடத்தில் ஏறி உட்காருகிறதற்கு முன்வந்திருக்கிறார். அவர் அந்தப் பிணத்தைப் பெட்டியில் போட்டுப் புதைக்க அங்கே போயிருக்கிறாரா அல்லது பாடை கட்டி எரிக்கப் போயிருக்கிறாரா அல்லது பிணத்துக்கு உயிரூட்டுகிற விதமான பின்நவீனத்துவக் குறளிவித்தை ஏதாவது செய்யப் போயிருக்கிறாரா என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## வசதியுள்ளோரின் வாழ்க்கைச் செலவு குறைகிறது!

விலை மதிப்புள்ள பென்ஸ் கார்கள் பஜேரோ ஜீப்கள் போன்ற ஆடம்பர வாகனங்களின் இறக்குமதித் தீர்வை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. போரின் காரணமான விலைவாசி உயர்வால் அல்லற்படும் அரசின் செல்லப்பிள்ளைகளான பெரும் பணக்காரர்களது கண்ணீரைத் துடைக்க அரசாங்கம் மேலும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே சர்வதேச நாணய நிதி போன்ற தரும நிறுவனங்களது ஆவலுமாகும்.

## திருவிழா நாயகர்கள்

பேராசிரியர் சிவத்தம்பி மீது கீழ்த்தரமான முறையில் தாக்குதல் தொடுக்கும் போக்கில் தனது சாதி வெறியையும் மதவெறியையும் பிரதேச வாதத்தையும் அம்பலப்படுத்தியவர் கம்ப வாதிரி ஜெயராஜ்(பாவம் கம்பர்). பேராசிரியர் சிவத்தம்பி தலைமை தாங்க இவ் வம்ப வாதிரி வாழ்த்துரை வழங்கிய வைபவம் அண்மையில் நடத்தேறியது. யாரோடு ஒரு பொது மேடையில் ஏறுவது என்பது பற்றி ஒரு தாரதம்பியம் வேண்டாமா.

## கண்கெட்ட பிறகு சூரிய வணக்கம்

கண்மூடித்தனமான முறையில் உலகமயமாக்கலைப் பின்பற்றிய காரணத்தாலேயே கிழக்காசிய நாடுகள் இன்று நெருக்கடியில் மூழ்கியுள்ளன என்று அமைச்சர் கதிர்காமர் கூறியுள்ளார். கண்ணைத் திறந்து கொண்டு உலகமயமாக்கலுக்கு இரையானாலும் அதே கதி தான் என்பது தான் உண்மை. சரி, அரசாங்கம் இப்போது கடைப்பிடித்து வரும் பொருளாதாரக் கொள்கை தவறு என்று அமைச்சர் உணர்கிறாராயின் அதைத் திருத்த என்ன செய்யலாம் என்றும் சொல்லுவாரா?

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI පුදියපූමි

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


## புதிய ஆண்டு 1999 எதிர்கொள்ளும் சவால்கள்!

1999 புதிய ஆண்டு பிறந்திருக்கிறது. முடிவுறப்போகும் இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டும் இதுவேயாகும். கடந்த ஆண்டுகளைப் போலவே யுத்தம்; தனியார்மயம், வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு வறுமை, வேலை இன்மை, வீடின்மை, கல்வீச் சீர்குலைவு, சுகாதாரச் சீர்கேடு போன்றவற்றை இலங்கைத் திருநாடு இவ்வாண்டிலும் எதிர்கொண்டு நிற்கிறது. மேற் கூறியவற்றால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர். தொழிலாளர்கள் பல்வேறு முனைகளில் தமது அதிருப்தி கண்டனம், எதிர்ப்பு என்பவற்றைத் தெரிவித்து வருகின்றனர். ஜனநாயகம் சுதந்திரம் மனித உரிமைகள் என்பன மீண்டும் கேள்விகளுக்கும் அபாயங்களுக்கும் உள்ளாகி வருகின்றன. மக்கள் திசையறியா வனத்தில் வீடப்பட்டவர்கள் போல் திகைத்து நிற்கின்றனர். யார் ஆட்சிக்கு வந்தாலும் எங்கள் நிலையில் எதுவும் மாறப் போவதில்லை என்ற சலிப்புப் குரல்களே கேட்கின்றன.

பதினேழு வருட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியும் நான்கு வருட பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியும் அண்ணன் தம்பி ஆட்சியாகவே தொடர்கிறது. சில முனைகளில் அண்ணனை விடத் தம்பி மோசமாகிக் கொண்ட நிலைமைகளும் காணப்படுகின்றன. யுத்தத்தை முன்னெடுத்து வழி நடத்துவதில் இன்றைய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியையும் பெற்ற ஆணையையும் அப்பட்டமாகவே மீறிச் செயல்படுகிறது. அதேபோன்று தனியார்மயம் பல்தேசியக் கம்பனிகளை வரவழைத்தல் போன்றவற்றிலும் மோசமான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க மேற்குல சக்திகளின் முழுமையான நலன்களுக்கு நாட்டையும் மக்களையும் அடகு வைத்துள்ளது. அதனால் உயர் வர்க்கம் சொத்து சுகம் பெருக்கிக் கொள்ள முடிகின்றபோது உழைக்கும் வர்க்கம் அதளபாதாளத்திற்குள் தள்ளப்பட்டு வருகின்றது. நடுத்தரவர்க்கம், உள்ளூர் உற்பத்தி வர்க்கம், நடுத்தர வியாபார சக்திகள் மீண்டும் மீண்டும் கீழே தள்ளப்பட்டு வருகின்றனர். நாட்டின் தொழிலாளர் விவசாய, அறிவுஜீவி வர்க்கத்தினர் உட்பட சகல உழைக்கும் மக்களும் தலை நிமிர முடியாத அளவுக்கு பாதிப்படைந்து காணப்படுகின்றனர்.

இத்தகைய மோசமான சூழல்களை மறைக்க யுத்தம் ஒரு திரையாக்கப்பட்டுள்ளது. யுத்தம் தமிழ்த் தேசிய இனத்தையும் முஸ்லீம் மலையகத் தேசிய இனங்களையும் கடுமையாகப் பாதித்துள்ளது. அதன் அழிவுகரமான செயல்கள் சிங்கள மக்களையும் நலிவடையச் செய்து நாட்டையே குட்டிச் சுவராக்கி வருகின்றது. இது பற்றி ஆளும் கட்சிக்கோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது அதிகார சக்திகளுக்கோ அடிப்படையான அக்கறை கிடையாது. அவர்களது ஒரே அக்கறை அதிகாரத்தை கைப்பற்றி அதனை தத்தமது உயர்வர்க்க நலன்களுக்குப் பயன்படுத்துவதேயாகும்.

அதேவேளை நாட்டின் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் என்றுமில்லாத அளவுக்கு அமைப்பு ரீதியில் பரந்த அளவில் சக்திபெற்று வரும் அபாயம் முன் எப்பொழுதையும் விட அதிகரித்துக் காணப்படுகின்றன. முன்பு பௌத்த மத பீடங்களும் பாராளுமன்ற அரசியல் பிழைப்பு நடத்துவோரும் இனவாதம் பேசி வந்த நிலை மற்றொரு வளர்ச்சிக் கட்டத்தை அடைந்து காணப்படுகிறது. பல்வேறு பெயர்களில் செயல்பட்டு வரும் இப்பேரினவாத அமைப்புக்கள் தீவிர பேரினவாத வெறிக் கூச்சல் இட்டு வருவதுடன் நில்லாது சில நடைமுறைகளிலும் இறங்கி நிற்கின்றன. அவற்றை உற்று நோக்கின் உலகின் பல பாகங்களில் முன்தள்ளப்பட்டு வரும் பலவகை அடிப்படை வாதங்களும் அவற்றின் பின்னால் ஏகாதிபத்திய சக்திகளின் கரங்கள் கெட்டியாக இருந்து வரும் தன்மைகள் இங்கும் காணப்படுகிறது. கொழும்பிலும் மலையகத்திலும் அம்பாறையிலும் இடம் பெற்று வரும் பேரினவாத சக்திகளின் நடவடிக்கைகள் அண்மைய உதாரணங்களாகும். ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணிக் கட்சிகளோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சியோ இப்பேரினவாத செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தப் போவதில்லை. அவை பேரினவாதத்திற்கும் பணிந்தும் இணங்கியும் போவதுடன் சில சந்தர்ப்பங்களில் தாமே அதனை முன்னெடுப்பவர்களாகவும் இருந்து வருகின்றனர். எனவே புதிய ஆண்டு மேலும் புதிய சவால்களை எதிர்நோக்கவே போகின்றது.

இந்நிலையில் யுத்தம், தனியார்மயம், வாழ்க்கைச் செலவு உயர்வு என்பனவற்றை எதிர்ப்பதுடன் பேரினவாத வெறியை எதிர்த்து நிற்கும் இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளது இயக்கம் வேகமடைய வேண்டும். தேசிய இனப்பிரச்சினையின் நியாயமான அரசியல் தீர்வை வலியுறுத்தி தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் புதிய இடதுசாரி முன்னணியின் வேலைத்திட்டம் பேரினவாத எதிர்ப்புடன் இணைக்கப்பட்டு முன்னெடுக்கப்படல் வேண்டும். இதுவே புதிய ஆண்டினை எதிர்கொள்வதற் குரிய துணிவான செயற்பாடாகும்.

-ஆசிரியர் குழு-

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் காலத்தின் கட்டாயமாகிறது

வெகுஜனன்

இலங்கை மோசமான உள்நாட்டு யுத்தம் ஒன்றில் சிக்குண்டு தனது வளம் அனைத்தையும் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. பெறுமதி மிக்க உயிர்களும் உடமைகளும் அழிந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக இளம் தலை முறையினர் அழிக்கப்பட்டு வருகின்றனர். நீண்ட நோக்கல் ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகளுக்கு இது மிகவும் களிப்பூட்டும் செயலாகக் காணப் படுகிறது. ஏறத்தாள கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக இளம் தலைமுறையினர் இரண்டரை லட்சத்திற்கு மேற்பட்டோர் கொண்றழிக்கப்பட்டுள்ளனர். அதற்காக ஆளும் வர்க்கம் எவ் வகையிலும் அனுதாபப்பட்டது கிடையாது.

### புலிகள் வற்புறுத்துகிறார்கள் அரசாங்கம் மறுக்கிறது

கடந்த பதினைந்து ஆண்டுகளாக வடக்கு கிழக்கில் நடாத்தப்பட்டு வரும் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படுவதற்கான எவ்வித அறிகுறியும் தென்படவில்லை. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நியாயமான அரசியல் தீர்வை ஏற்படுத்தும் சமாதானத் தேவதையாகக் காட்சியளித்துப் பதவிக்கு வந்த சந்திரிகா அம்மையாரே யுத்த சன்னதம் ஆடி நிற்கிறார். அவரிடம் எதிர் பார்த்த அனைத்தும் பொய்யாய் கனவாய்ப் பழங்கதையாகிப் போய்விட்டது. அவர் நான்கு வருடங்களுக்கு முன்பு கூறிய ஒவ்வொன்றுக்கும் நேரெதிரான நிலைப்பாட்டிற்கு வந்துள்ளார். அவரது ஆட்சி நீடிப்பிற்கும் அடுத்த தடவை மீண்டும் பதவிக்கு வருவதற்கும் யுத்தத்தையே கருப் பொருளாக்கிக் கொண்டுள்ளார்.

### சுயநலன் தேடாத நாட்டின் நேர்மையான மத்தியஸ்தம் பெறப்படல் வேண்டும்.

அத்தகைய அம்மையாரிடம் யுத்தத்தை நிறுத்துவார் என்றும் பேச்சுவார்த்தை தொடங்குவார் நியாயமான தீர்வு கொண்டு வருவார் என எவராவது இன்னும் எதிர்பார்க்க முடியுமானால் அவர்கள் வெறும் முட்டாள்களாகவே இருக்கமுடியும். அவரது எந்தவொரு சொல்லிலும் செயலிலும் யுத்தத்தை நிறுத்துவதற்கான அறிகுறி எதையும் காண இயலவில்லை. சந்திரிகா அம்மையாரின் அண்மைய பத்திரிகை நேர்காணல்களிலும் சொற் பொழிவுகளிலும் செய்தியாளர் சந்திப்புகளிலும் ஒரு விடயத்தை நன்கு அடித்துக் கூறி வருகின்றார். அதாவது இலங்கையின் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தம் தேவையற்றது என்பதாகும். இதனை தென்னாபிரிக்கா முதல் புதுடில்லி வரை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். அவர் இல்லாத இடங்களில் அவரது நம்பிக்கைக் குரிய வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்றும் இதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்திற்கு இடம் இல்லை என்றும் கூறி வருகின்றார்.

அதேவேளை யுத்தத்தின் எதிர்த் தரப்பில் இருந்து வரும் புலிகள் இயக்கம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வற்புறுத்தி பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகக் கூறியுள்ளது. ஏன் தாம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வற்புறுத்தி நிற்பதற்கு கடந்தகால அனுபவங்களைத் தகுந்த காரணமாகக் காட்டியும் உள்ளனர்.

அண்மைக் காலத்தில் பல்வேறு நாடுகளின் அரசாங்கங்களைச் சேர்ந்த தலைவர்களும் முக்கியஸ்தர்களும் தாம் மத்தியஸ்தம் செய்து வைக்கத் தயாராக இருப்பதாகவே கூறி வந்திருக்கின்றனர். முக்கியமாக தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியும் விடுதலைப் போரட்ட வீரரும் தற்போதைய அணிசேரா இயக்கத்தின் தலைவருமான நெல்சன் மண்டேலா இலங்கை இனப்பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்ய முன்வந்த போதிலும் இலங்கை அதனைப் புறம்தள்ளிக் கொண்டது.

இலங்கை அரசாங்கம் ஏன் மூன்றாவது மத்தியஸ்த்தத்தைப் பிடிவதமாக மறுத்து வருகின்றது என்பது ஆழ்ந்த சிந்திக்க வேண்டி யுள்ளது. ஒன்று இருண்டவன் கண்களுக்கு மருண்டதெல்லாம் பேய் என்பது போல மத்தியஸ்தத்திற்கு வரும் நாடுகள் இனப் பிரச்சினையில் தமிழர்களின் பால் அனுதாபம் காட்டி விடுவார்களோ என்று அஞ்சுவதாகும். இதற்கு ஏற்கனவே உருவாகிய இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையை ஒரு பட்டறிவாகக் கொள்கிறார்கள். இரண்டாவது 'முதுகில் புண் இருந்தால் பொட்டு நுழையப் பயப்படுவது' போல் பேரினவாத ஒடுக்குமுறையை நடைமுறைப் படுத்திக் கொண்டு எவ்வாறு மூன்றாம் தரப்பினர் முன் தமது நியாயங்களையும் வாதங்களையும் சமர்ப்பிப்பது என்பதும் அரசாங்கத்தினருக்குப் பிரச்சினையே யாகும்.

ஆனால் இலங்கையின் இன்றைய யதார்த்த நிலையானது ஒரு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இன்றி இனப்பிரச்சினையை நியாயமான தீர்வாக்க முடியாது என்பதை சாதாரணமாக எவருமே ஏற்றுக் கொள்வர். கடந்த காலத்தி லிருந்து கற்றுக் கொள்வதும் நிகழ்காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் தேவையான ஒன்றாகும். அவ்வாறு நோக்கும் போது சமாதான சூழலில் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு மேற் கொள்ளப்பட்ட ஒவ்வொரு தீர்வு முயற்சியும் திருப்திகரமாக அமையாது போனமை மட்டுமின்றி நடைமுறைக்கு வராமலே தடுத்து நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகமானதாகும். முழுமையற்ற அச்சூழலுக்கு அரசியல் அதிகார வெறிப்பசி கொண்ட சக்திகள் மட்டுமின்றி பேரினவாத வெறி கொண்ட பௌத்த சிங்கள சக்திகளும் காரணமாவார்கள். இத்தகைய சக்திகளது தூரநோக் கற்ற குறுகிய நிலைப்பாடே இனப்பிரச்சினையை இன்றைய யுத்தமாக்கியது என்பதே வரலாறு. சோகமும் வேதனையும் கண்ணீரும் இரத்தமும் மிகுந்த வரலாற்றின் தொடர்ச்சி தடுத்து நிறுத்தப்பட வேண்டு மாயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றே தேவையான தாகும்.

அத்தகை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பது கவனமாகவும் நிதானமாகவும் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். இது முன்பு இந்தியா வகித்துக் கொண்ட குரங்கு அப்பம் பிரித்துக் கொடுத்த கதை போன்ற பாத்திரத்தை உடையதாக அமைந்து விடக் கூடாது. மத்தியஸ்தத்திற்கு வரும் எந்தவோரு நாடும் தனது சொந்த நலன்களையோ அல்லது வல்லரசு நாடுகளின் தேவைகளையோ வலியுறுத்தும் உள்நோக்கம் கொண்டதாக அமைந்துவிடக் கூடாது. ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளோ இணைந்து அல்லது தனித்தோ இலங்கையின் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு தன்னலமற்ற பங்கினை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அத்தகைய ஒரு மத்தியஸ்தத்தை இன்று ஏற்காது விடினும் காலத்தின் கட்டாயமாக இலங்கை அரசாங்கம் காலம் தாழ்த்தியேனும் ஏற்றே ஆகவேண்டும். ஏனெனில் அவ்வாறான மூன்றாம் தரப்பு ஒன்று இன்றி யுத்தத்திற்கோ அன்றி அதன் சார்பான இனப்பிரச்சினைக்கோ நீதியான தீர்வைக் கொண்டுவரக் கூடிய ஆற்றல் இலங்கையின் ஆளும் அரசியல் சக்திகளுக்கு கிடையாது என்பதே இன்று காணப்படும் யதார்த்தம் ஆகும்.



கங்காணி: பத்திரிகையில என்ன விஷேசமா பாத்திட்டிருக்கே ராமசாமி.

ராமசாமி: நம்ம தொண்டமான் யூ.என்.பி கட்சியை பச்சை இனவாதக் கட்சி என்று கண்டு பிடிச்சிட்டதைப் பற்றி எழுதியிருக்காங்க.

நன்றி - நூலகத்திட்டம்



# சீதா எலிய புனித பிரதேசத் திட்டம் சிங்கள பௌத்த பேரினவாத வெறிக்கு வெற்றி

நுவரெலியாவுக்கு அருகிலுள்ள சீதாஎலியவில் அமைந்துள்ள சீதாபிராட்டி கோயிலை புனர்நிர்மாணம் செய்வதற்கும் அதனை சுற்றியுள்ள 35 ஏக்கர் காணியை புனித பிரதேசமாக்குவது என்று உல்லாசப் பிரயாணத்தொழில் அமைச்சு எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாது இடை நிறுத்துவதென ·முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து பூமிபுத்திர பக்ஷய, தேசிய பௌத்த பிக்குகள் முன்னணி, சிங்களவர் பாதுகாப்பு முன்னணி, சிங்கள வீரவிதான இயக்கம் போன்ற சிங்கள பௌத்த பேரினவாத தனிநபர்களும் காட்டிய எதிர்ப்பை அடுத்தே மேற்படி தீர்மானம் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

சீதாஎலியாவில் அக்கோயில் சிறிய அளவில்தானும் ஏற்கனவே இருந்துவந்துள்ளது அக்கோயிலை தரிசிக்க பௌத்தர்கள் இந்துக்கள் என்ற பேதமின்றி பெரும் எண்ணிக்கையான மக்கள் தினமும் அங்கு செல்கின்றனர். இராணுவ வீரர்கள், பொலிசாரும் கூட அங்கு செல்கின்றனர். அக்கோயிலை புனர் நிர்மானம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் நிதியுதவியை செய்துவருகின்றனர்.

அக்கோயிலை புனர்நிர்மாணம் செய்து அப்பிரதேசத்தை புனிதப்பிரதேசமாக பிரகடனப்படுத்த அரசாங்கம் முடிவெடுத்திருந்தது. அதற்காக அமைச்சரவை தீர்மானமும் நிறைவேற்றப் பட்டிருந்தது. இத்திட்டத்திற்காக நிறைவேற்ற இந்திய அரசாங்கத்தின் உதவி யையும் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்திய உல்லாசப்பிரயாணிகளை இப்பிர தேசத்திற்கு கவர்ந்திழுக்கும் நோக்கத் திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் சிங்கள பௌத்த அமைப் புக்கள் காட்டிய எதிர்ப்பை அடுத்து அத்தீர்மானம் இடைநிறுத்தப் பட்டுள்ளது. அவ்வமைப்புக்கள் மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலிருந்தும், இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டி லிருந்தும். அத்தீர்மானத்துக்கு எதிர்ப்பை காட்டின. புனித பிரதேசமாக்கப்படுவது மலையகத் தமிழ் மக்கள் அங்கு ஆதிக்கம் செலுத்தி சிங்கள மக்களுக்கு எதிரான தனிநாடொன்றை மலைநாட்டில் அமைப்பதற்கு அடிப்படையாக அமைத்துவிடும் என்று பிரசாரப்படுத்தி வருகின்றன. இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மலையகத் தமிழ் மக்கள் அவர்களது ஆதிக்கத்தை நிலை நாட்ட இருப்பதாக இந்திய துவேசத்தையும் கக்கிவருகின்றன.

சீதாஎலிய புனிதபிரதேசத்திட்டத்துக்கு இந்தியா உதவி செய்வதால் எதிர்ப்பதாக கூறும் பௌத்த அமைப்புக்கள் இந்தியா உட்பட வெளிநாடுகள் பல மேலாதிக்கத்தை நிலைநாட்டியுள்ள பல திட்டங்கள் குறித்து மௌனமாகவே இருந்துள்ளன. அவ்வாறான திட்டங்களுக்கு வேறு கோணங்களி லிருந்து காட்டப்பட்ட எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அரசாங்கம் நடைமுறைப் படுத்தியுள்ளன. வொல்ஸ் ஒப் அமெரிக்கா, கந்தலம ஹோட்டல் போன்றவற்றை உதாரணமாக கூறலாம். இந்தியாவில் இலங்கையின் பௌத்த பிக்குகளினதும் இலங்கை அரசாங்கத்தின் ஏற்பாடுகளினால் பல பௌத்த நிலையங்கள் விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. சென்னையில் எழும்பூர் புகையிரத நிலையத்துக்கு முன்பாக இருக்கும் பௌத்த நிலையம் தொட்டு அண்மையில் புதுடெல்லியில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க திறந்து வைத்த பௌத்த நிலையம்வரை இலங்கை அரசாங்கத்தினாலும், இலங்கை பிக்குகளினதும் ஏற் பாட்டில் பல பௌத்த நிலையங்களும், விகாரைகளும் அங்கு அமைக்கப் பட்டுள்ளன. புத்தகாயவிலுள்ள விகாரைப்பகுதி இலங்கை அரசாங்கத் துக்கென பிரதேசமொன்று ஒதுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்த க்கதாகும்.

எனவே இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கையில் வழக்கத்திலுள்ள ஒரு இந்துசமய கோயிலை சுற்றியுள்ள பகுதியை புனிதநகரமாக பிரகடனப்படுத்து வதை எதிர்ப்பதாக கூறுவது எவ்வகையிலும் நியாயமாகாது. சீதாஎலிய புனிதப்பிரதேசத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதன் மூலம் சிங்கள பௌத்த பேரினவாதம் மேலும் மேலும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதையே அவதானிக்க முடிகிறது. சீதாஎலிய விடயத்தை மையப்படுத்தி மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத நடவடிக்கைகளை சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் தொடங்கியுள்ளன. தற்போது மலையகப் பகுதிகளில் தமிழ் கிராமசேவகர்கள் நியமிக்கப்பட விருப்பதற்கும் எதிர்ப்பு தெரிவிக் கின்றன. அச்சக்திகள் மலையகத்தில் அவற்றின் குரூரபேரினவாத பாசிசத்தை நிலைநாட்ட தயாராகி வருகின்றன.

இதற்கு திட்டமிட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் எதையுமே செய்யாமல் மலையகத் தொழிற்சங்கங்கள் வாளாவிருக் கின்றன. அவை அவற்றின் அரசியல் லாபங்களிலேயே கவனம் செலுத்துகின்றன. மேற்படி பேரின வாதிகளின் நடவடிக்கைகளால் மலையகத் தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குட்படுத்தப் 'படுமாயின் தொழிற்சங்கங்களின் இருப்பு மட்டும் நிரந்தரமாக இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க தவறிவிடுகின்றன. அல்லது கையாலாகாமல் இருக்கின்றன.

ஆனால் மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாதத் துக்கு எதிராக 'உயிர் வாழ்வதற்காக விழித்தெழுவோம்' என்ற நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன. அந்நிகழ்ச்சிகள் ஏற்கனவே குருநாகல், இரட்னபுரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்நிகழ்ச்சிகளை பெரும் எண்ணிக் கையிலான சிங்கள இடதுசாரி நடவடிக்கையாளர்களுடன் புதிய இடதுசாரி முன்னணியிலுள்ள கட்சிகளும் வேறு அமைப்புகளும் சேர்ந்து முன்னெடுத்து வருகின்றன. இந்நிகழ்ச்சிகள் போதுமானதாக, பூரணமான வலுவுள்ளதாக இருக்கின்றன என்று திருப்திப்பட முடியாவிட்டாலும் அவை வரவேற்கப்பட வேண்டியனவே. இந்த முயற்சிகளுடன் மலையத்தி லுள்ள அரசியல் அக்கறையுடை யவர்கள் மட்டுமின்றி அரசியல் ஈடுபாடில்லாதவர்களும் கூட இணைந்து கொள்வதன் மூலமும் மேலும் விரிவான இனவாத எதிர்ப்பு நடவடிக்கைகளையும், இயக்கங் களையும் முன்னெடுப்பதன் மூலமே மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத அரசியலைத் தோற்கடிக்க முடியும்.

## எங்கள் புதைகுழிகள் சமாதிகள் அல்ல! செம்மணியில் கேட்கும் குரல்கள்

நாங்கள் செம்மணிப் புதைகுழிகளில் இருந்து பேசுகின்றோம். எங்களில் எத்தனை பேர் இந்தப் புதைகுழிகளில் புதைக்கப் பட்டுள்ளோம் என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. ஆனால் வெளிக் கிளம்பும் குரல்களை வைத்துக் கணித்தால் ஒரு நானூறோ அல்லது ஐந்நூறாகவே இருக்கலாம். எங்களது அவலக் குரல்கள் எல்லோர் செவிகளிலும் கேட்காது. எங்களைப் பிரிந்து தவியாய்த் தவித்து நிற்கும் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும், மனைவி மாருக்கும், உறவினர்களுக்கும், மனித உரிமைகளுக்காக, நீதி நேர்மைக்காக குரல் கொடுப் போருக்கு மட்டுமே எங்கள் சோகக் குரல்கள் கேட்கும். எங்களைப் போன்று துர்ரதிஸ்டம் கொண்ட வர்கள் நாடு முழுவதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கிலும் ஏற்கனவே புதைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவோம். ஆயுதப்படைகளால், மூத்த இயக்கங்களால், மாற்று இயக்கங்களால், சொந்த இயக்கங்க ளால் புதைக்கப்பட்டவர்கள் பற்றி முன்பு அறிந்திருந்தோம். ஆனால் நாம் ஆயுதப் படைகளின் கைகளில் சிக்குண்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகி உயிர் பறிக்கப்பட்டபோது தான் அதன் கொடுரத்தை அக்கிரமத்தை அநியாயத்தை அனுபவிக்க முடிந்தது.

எங்களுக்கு நடந்தவற்றை எங்களால் மட்டுமே கண்டுகொள்ள முடிந்தது. ஆனால் எம்மைப் பற்றிய எந்த விபரமும் அறியாது எங்களை நினைத்து நினைத்து கண்ணீர் வாழ்க்கை வாழும் எமதருமைப் பெற்றோர்கள், மனைவிமார், பிள்ளைகள், உடன் பிறப்புகள் எத்தனை முயற்சிகள் செய்தும் அவர்களுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை. நீதிமன்றத்தில் எங்கள் புதைகுழிகள் பற்றி எடுத்துக் கூறிய பின்பும் இதுவரை திறந்து காட்டப்படவில்லை. எங்களுக்கு நடந்த கதி பற்றி விசாரிக்கப்பட வில்லை. எங்களை இழந்து தவிப்பவர்களுக்கு ஒரு முடிவு கூறப்படவில்லை. அவர்கள் இப்பொழுதும் நாங்கள் வருவோம் வருவோம் என்று எதிர் பார்த்திருக்கிறார்கள். எங்களை வளர்த்து படிக்க வைத்து தொழில் தேடித் தந்த பெற்றுறோர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு நடைப் பிணங்களாகிக் கொண்டிருக் கிறார்கள். எங்களது உழைப்பில் வாழ்ந்த மனைவிமாரும் பிள்ளைகளும் பட்டினியால் வாடி வதங்கி வழியற்று இருக்கிறார்கள். அவர்களது எதிர்காலம் இருண்டு வறண்டு கிடக்கிறது.

இத்தனைக்கும் நாங்கள் செய்த குற்றம் தான் என்ன? நாங்கள் குற்றம் ஏதாவது செய்திருந்தால் கைது செய்து விசாரணை செய்திருக்கலாம். விசாரணை முடியவில்லை என்றால் தடுத்து சிறைகளில் வைத்திருக்க லாம். குற்றம் புரிந்திருந்தால் தண்டனையாவது தந்திருக்கலாம். நாங்கள் காரணம் இன்றியே பிடிக்கப்பட்டோம். நம்மை பிடித்தவர்களே விசாரணை நடாத்தி சித்திரவதை செய்து இறுதித் தீர்ப்பையும் தந்தனர். அதனால் எங்கள் உயிர்கள் பறிக்கப்பட்டன. இறுதியில் இரகசியமாகவே புதைக்கப்பட்டோம். நாங்கள் செய்த குற்றம் தமிழர்களாய் பிறந்தது. அதுவும் இளைஞர்களாய் யுவதிகளாய் இருந்தது. சொந்த மண்ணையும் மக்களையும் விட்டுப் பிரியாது அவர்களுடனேயே வாழ்ந்தது. இடப் பெயர்வின் இடர்களை எல்லாம் சுமந்து களைக்காது சலிக்காது பயந்து ஓடாது தலைநிமிர்ந்து நின்றது. எங்களது சொந்த இருப்பிடங் களுக்குச் சென்று எமக்குரிய வாழ்வை சவால்களுக்கு மத்தியில் மீளமைத்துக் கொண்டது.


இவற்றுக்காகத் தான் 1996 ஏப்பிரல் 19ம் திகதிக்கு பின்னைய நாட்களில் நாம் பிடிக்கப்பட்டோம். இறுதியில் புதைகுழிகளில் போட்டு மூடப்பட்டோம். செம்மணியில் மட்டுமின்றி குடா நாட்டின் பல்வேறு பகுதிகளில் எங்களைப் போன்றோர் புதைக்கப்பட்டார்கள். எங்களால் இப் புதைகுழிகளில் இருந்து என்றுமே மீளமுடியாது. ஆனால் எங்களது குரல்கள் எப்பொழுதும் நீதி கேட்டு எழுந்து ஒலித்துக் கொண்டே இருக்கும். எங்களுக்காக நியாயம் கேட்டு எழும் ஆயிரம் லட்சம் மக்களது நீதிக் குரல்களுடன் நாம் சங்கமித்தே இருப்போம். அநீதிகளை அடக்குமுறைகளை ஒழிக்கும் போராட்டம் வெற்றி பெறும் வரை எமது குரல்கள் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருக்கும். என்றோ ஒரு நாள் மக்களின் கோபாவேசம் மிக்கப் போராட்டத்தின் வேகத்தால் எங்களது புதை குழிகளுக்கு நீதியான தீர்ப்பு கிடைக்கவே செய்யும். அப்போது எங்களைப் புதைத்தவர்களுக்குரிய தண்டனை கிடைத்தே தீரும். எங்கள் புதைகுழிகள் வெறுமனே அமைதியான சமாதிகள் அல்ல. அல்லது அழகு படுத்தப்பட்ட மயானங்களும் அல்ல. ஒடுக்கு முறைகளுக்கு எதிரான புரட்சிகர வெகுஜன போராட்டங்களுக்கு உந்து விசை கொடுக்கும் களமாகவும் தளமாகவும் செம்மணிப் புதைகுழிப் பிரதேசம் இருந்து வரும்.

-நமன்-

## தோழர் சாருமதியின் மறைவு

தோழர் க. யோகநாதன்–சாருமதி கடந்த 28–09–98ல் இயற்கை எய்தினார். ஆசிரியராகக் கடமை புரிந்து வந்த அவர் மட்டக்களப்பில் மாக்சிசம் லெனினிசம் மாஓவின் சிந்தனையை முன்னெடுத்து வந்ததில் முன்னின்றவர். ஆரம்ப காலம் தொட்டு இறுதிவரை சாருமதியுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்ததன் காரணத்தால் இச் சிறு கட்டுரையை அவர் நினைவாக எழுதுகின்றேன்.

அக்காலத்தில் தோழர் கிருஷ்ணக் குட்டியுடன் இணைந்து கொண்டிருந்த இளம் இரத்தங்களான தோழர்களுடன் சேர்ந்து புதிய வார்ப்புக்குள்ளானார். அதாவது மார்க்ஸ்சிசத்திற்கு அடிப்படைத் தத்துவமாக இருக்கின்ற விஞ்ஞானம் தழுவிய இயங்கியல் பொருள்முதல் வாதம் என்னும் தத்துவத்தைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்ததோடு பாட்டாளி வர்க்க சிந்தனைகளான மார்க்ஸ்ஸசம், லெனினிசம், மாஓசேதுங் சிந்தனை ஆகியவைகளையும் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். "கருத்துக்கள் வானத்தில் இருந்து வருபவையல்ல சமூகத்திலிருந்தே வருகின்றன" என்ற மாஓ கற்பித்ததிற் கமைய யோகநாதன் நடைமுறை வேலைகளிலிருந்து கற்பது, அரசியல் வகுப்புக்களிலிருந்து கற்பது, கலந்துரையாடல்களிலிருந்து கற்பது, விவாதங்களின் மூலமாக கற்பது, கற்றவைகளை இவ்வாறு கற்பித்தும், அசைபோட்டும் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டார். அப்படியான இப்போக்கு பலமுறைகள் திரும்பத் திரும்பஇடம் பெற்றன. காலங்கள் உருண்டோடின. புடம்போடலுக்குள்ளானார். யோகநாதன் சாருமதியானார்.



காலப்போக்கில் பல தோழர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களோடு முக்கியமாக தோழர் சுபத்திரன் மறைவு. நான் நாட்டில் இல்லாத இடைவெளி, நாட்டில் வடக்கு கிழக்கில் உருவாகிய அரசியல் ஆயுதப்புயல் ஆகிய காரணங்களினூடாக தான் தனிமையாக செயல்பட ஆரம்பித்தார்.

இந்த இடத்தில் தான் ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனிக்க வேண்டும். நான் மேற்காட்டிய அந்த சுற்ற, சுழல் அமைப்புக்களுடன் இருந்து இயங்கிய ஒருவர் தனது முன்னைய சுழல் இழந்தும் மேலும் ஒரு ஒவ்வாத அரசியல் காற்று, ஆயுத அச்சுறுத்தல் போன்றஅழுத்தங்கள் இருந்தும், தனக்குக் கிடைத்த அரசின் சம்பளம், மற்றும் தான் சம்பாதித்த வருமானம் இவைகளுடன் "அப்பாடா" என்று ஒய்ந்திருக்கலாம். ஆனால் அவ்வாறு ஒதுங்கி இருக்கவிரும்பவில்லை யோகநாதன். இது ஒரு முக்கியமான விடயம் என்று நான் கருதுகிறேன். எங்கள் எல்லோரினதும் இடைவெளிகளை அவர் நிரப்பிக்கொண்டு இருந்தார். யோகநாதன் பணிகள் எல்லாமே சரியாகவேயிருந்தன என்று நான் சொல்ல வரவில்லை. அவைகள் விமர்சனத்திற்குள்ளாகியிருக்கின்றன. மேலும் விமர்சனத்திற்குள்ளாகலாம். இது வேறு விடயம். ஒரு ஸ்தாபன கட்டமைப்புக்குள்ளாகாமல் தனி மனிதனாய் செயல்படும் போது அவை சாதாரணக்குறைகளே. ஆனால் தனிமனிதனாகவாவது நின்று செயல்பட்டமைக்கு இப்பிரதேசத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட்டுகளாகிய நாம் நன்றியுணர்வோடு தான் அவரையும். அவர் செயற்பாடுகளையும் பார்க்க வேண்டும். மேலும் நாம் நமக்குள்

11ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# பிரபாவின் உரையும்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வருடாந்த மாவீரர் தினம் அண்மையில் வந்து சென்றது. அரச தரப்பினர் கடந்த ஒன்றரை வருடமாக முன்னெடுத்து வரும் வடக்கு நோக்கிய ஜயசிக்குறு ராணுவ முன்னேற்றம் மாங்குளத்திற்கு அப்பால் நகர முடியாத நிலையிலும் அதேவேளை கிளிநொச்சியைப் புலிகள் இயக்கம் கைப்பற்றி பாரிய அழிவை ஏற்படுத்திய சூழலிலும் இம் முறை மாவீரர் தினம் எதிர் கொள்ளப்பட்டது. புலிகள் இயக்கம் மாவீரர் தினத்தில் இரண்டு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வது வழக்கம். ஒன்று தமது இறந்த போராளிகளுக்கு அதி உயர்ந்த மரியாதையையும் அஞ்சலியையும் செலுத்திக் கொள்வது. இதனால் களத்திலுள்ள தமது போராளிகளின் மனவுறுதியையும் போரிடும் ஆற்றலையும் வலுப்படுத்திக் கொள்வது. அதேவேளை பொது மக்கள் மத்தியில் போராட்டத்தின் அவசியத்தையும் தேவையையும் பிரச்சாரம் செய்வதுடன் புதியவர்களை இணைத்துக் கொள்ள மாவீரர் தினத்தைப் பயன்படுத்தவும் செய்வர். இரண்டாவது ராணுவ ரீதியில் பலத்த தாக்குதலை நடாத்தத் தவறுவதுமில்லை. ஆனால் இம்முறை அத்தகைய தாக்குதல் எதுவும் எதிர்பார்க்கப்பட்டது போல் மாவீரர் தினத்தை அண்மித்த நாட்களில் இடம் பெறவில்லை. இருந்தும் முன் கூட்டியே கிளிநொச்சி மீதான தாக்குதலும் அதன் மீதான அவர்களது வெற்றியும் மாவீரர் தினத்திற்கு மேலதிக வெற்றிப் பூரிப்பை வழங்கியது என்பதைக் காண முடிந்தது.

இந் நிலையிலேயே சகலராலும் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரை உற்று அவதானிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தத்தமது நிலைக்கு ஏற்ப அவ்வுரைக்கு விளக்கமும் வியாக்கினமும் கொடுத்தனர். உள்நாட்டில் மட்டுமின்றி உலக அளவிலும் அவ் உரை செவிமடுக்கப்பட்டது.

பிரபாகரனின் மாவீரர் தின உரையினை நோக்கும் போது அதன் சாராம்சத்தில் பலமும் பலவீனமும் உள்ளடங்கியிருந்தமையை அவதானிக்க முடிந்தது. இலங்கையில் தமிழர்கள் இன மொழி பிரதேச ரீதியில் வரலாற்று ரீதியாக எவ்வாறு பாகுபாடு புறக்கணிப்பு நிராகரிப்பு என்பனவற்றுக்கு உள்ளாகி வந்துள்ளதுடன் இன ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளார்கள் என்பதை உரை சுட்டிக் காட்டியது. அதன் காரணத்தால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்க வேண்டிய நிர்ப்பந்த சூழல் ஏற்பட்டு இன்று வரையான



கொடிய யுத்தத்தால் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன் இன்றைய துன்பதுயரங்களையும் உரை எடுத்தியம்பியது. இத்தகைய யுத்த நிலைக்கு தொடர்ந்து வந்த பேரினவாத அரசாங்கங்களே காரண கர்த்தாக்கள் எனக் குற்றம் சாட்டி எதிர் முனையிலே நிற்கும் விடுதலைப் புலிகளாகிய தாங்கள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும் பேச்சசார்த்தை ஒன்றில் ஈடுபடவும் நியாயமான தீர்வுக்கு வரவும் தயாராக இருப்பதாகவும் அவ்வுரையில் குறிப்பிடப்பட்டது. அத்தகைய பேச்சவார்த்தை மூன்றாம் தரப்பு மத்தியஸ்துடனேயே இடம் பெறவேண்டும் என்றும் முன்நிபந்தனை விதக்கப்படக் கூடாது என்றும் சுட்டிக் காட்டியது. தமிழர்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுயமரியாதையும் சமத்துவமுமான சுயாட்சிக்கு தாம் தயாராக இருப்பதாகவே அவ் உரையில் கோடிட்டுக் காட்டப் பட்டது. மேற்கூறிய விடயங்கள் இன்றைய யதார்த்த நிலைமைகளோடு பெருமளவிற்குப் பொருந்தக் கூடியனவாக இருந்தன. ஆனால் பிரபாகரனின் அவ் உரையில் சில பாதகமான கூற்றுக்கள் இடம் பெற்றிருந்தன. அதாவது ஆரம்பத்திலே முன் நிபந்தனை முன்வைக்கப்படக் கூடாது என்று கூறி விட்டு பின் முன் நிபந்தனைகள் சிலவற்றை வற்புறுத்துவது போன்ற பகுதிகள் உரையிலே காணப்பட்டன. அத்துடன் பௌத்த சிங்கள மக்களை ஒரே நிலைக்குள் வைத்து தமிழ் சிங்களம் என்பதாகவே உரையில் காட்டப்பட்டது. இது சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஒடுக்கப்படும் மக்களை மேலும் எதிரியின் பக்கத்திற்கு தள்ளிவிடுவதாகவே உள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் யுத்த எதிர்ப்பு நிலையையும் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சி வழங்கப்படல் வேண்டும் என்ற சிங்கள இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளது கோரிக்கைகளையும் கவனத்தில் கொள்ளாமலும் அவ் உரை புறமொதிக்கிக் கொண்டுள்ளது. மேலும் உரையில் சர்வதேச சமூகம் தமிழர்களின் போராட்ட நியாயத்தைக் கவனத்தில் கொள்ளவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. சர்வதேச சமூகம் என்பது மக்களா? அல்லது ஏகாதிபத்திய ஆளும் அரசாங்கங்களா? பிராந்திய மேலாதிக்க சக்திகளா? என்பது தெளிவு படுத்தப்படவில்லை. எந்தவொரு போராட்டமும் அது நியாயமானதாக வளர்ந்து வெற்றி பெறுவதற்கு சர்வதேச மக்களினதும் தொழிலாளி வர்க்கத்தினதும் ஆதரவு அரவணைப்பு அவசியமானதாகும். வல்லரசுகளை ஆளும் அதிகார மையங்களை எதிர்பார்ப்பது எந்தவொரு விடுதலைப்

# சந்திரிகாவின் பதிலும்

போராட்டத்திற்கும் பயன்தரமாட்டாத ஒன்றாகும். இவற்றுடன் கூடவே இன்றைய தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் தமிழ் முஸ்லீம் மக்கள் ஐக்கியம் உட்பட ஏனைய அமைப்புக்கள், ஜனநாயக சக்திகள் என்போரை அரவணைத்து பலம் சேர்ப்பதற்கான செய்தி காணப்படாமை உரையின் பலவீனமாகும். தேசிய இன விடுதலைப் போராட்டம் பதினைந்து ஆண்டுகளைக் கடந்து பல்வேறுபட்ட இழப்புகள் பட்டறிவுகள் அனுபவங்களுக்கு ஊடாக வந்து நிற்கும் இன்றைய கட்டத்தில் அத்ன் சமூக அரசியல் யாதார்த்த நிலை சரியான கண்ணோட்டத்தில் பார்க்கப்படல் வேண்டும். சுய விமர்சனமும் மறுமதிப்பீடுகளும் மிகமிக அவசியமானதாகும். அதுவே இன்றைய தேசியஇன விடுதலைப் போராட்டமாக வளர்ச்சி பெறவேண்டிய ஒன்றாகும்.

மேற்படி பிரபாகரனின் மாவீரர்தின உரையின் சாதகபாதக அம்சங்கள் ஒரு புறமிருக்க அவ் உரையில் விடுக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வு பற்றிய கூற்றுக்கு அரசாங்கத் தரப்பில் முக்கியமாக ஜனாதிபதியான சந்திரிகா அம்மையார் அளித்துள்ள பதில்கள் ஆங்காங்கே வெளிவந்துள்ளன. இந்திய பத்திரிகைகளுக்கு அண்மையில் வழங்கிய பேட்டிகளில் சந்திரிகா சுற்றிவளைத்து பழைய பல்லவிகளைத் தான் பாடியுள்ளார். அவரால் தெளிவானதும் திட்டவட்டமானதுமான ஆக்கபூர்வ பதில் எதையும் முன்வைக்க முடியவில்லை. அதற்குக் காரணம் அவர்களது அடிப்படையான நிகழ்ச்சித் திட்டமாக அமைந்திருப்பது யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு முடிவு காண்பது என்பதேயாகும். இதனை அண்மையில் புதிதாக பதவி ஏற்ற இராணுவத் தளபதி தெளிவுபடுத்தியுள்ளமை கவனத்திற்குரியதாகும். அவரது கூற்று யுத்தம் எந்தக் கட்டத்திலும் நிறுத்தப்படமாட்டாது. ராணுவம் பிடித்த இடங்களை இம்மியளவும் விட்டுக் கொடுக்க மாட்டாது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்பே அரசியல் வாதிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்பதாகும். இதனைத் தான் சந்திரிகாவும் கூறி வருகிறார். செத்துக் கொண்டிருக்கும் தீர்வுப் பொதியைக் காட்டியே இதுவரை ஆட்சியை நடாத்தி வந்துள்ள சந்திரிகா அம்மையார் அடுத்த தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறார். கடந்த தேர்தலில் சமாதானம் பற்றி முழக்கிய அவர் எதிர் வரும் தேர்தலில் நிச்சயம் யுத்தத்தைப் பற்றியே ஓங்கி முழக்கமிடப் போகிறார் என்பது நம்பக் கூடியதாகும். ஏனெனில்



பிரபாகரன் வெளியிட்டுள்ள கருத்துக்களை நம்பமுடியாதவை என்றும் அவரது அணுகுமுறை கிட்லரின் அணுகுமுறைக்கு ஒப்பானவை என்றும் வருணித்திருக்கிறார். மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தை நிராகரித்திருக்கும் அவர் பேச்சுவார்த்தைக்கு ஒன்று சேர்த்துவைக்கும் ஏற்பாட்டாளர் ஒருவர் பேச்சுவார்தையில் பங்கு பற்றாது பின்னால் இருந்து அவதானித்தால் போதும் என்றும் கூறி உள்ளார். அதில் கூட ஏற்பாட்டாளர் யாராக இருக்க முடியும் என்பது பற்றியோ அதற்குரிய நேரகாலம் சம்பந்தமாகவோ நம்பிக்கை தரும் பதில் வழங்கப்படவில்லை. புலிகளைப் பயங்கரவாதிகள் என்பதிலும் ஐக்கிய தேசியக்கட்சியை ஒத்துழைக்க வில்லை என்றும் உலக நாடுகள் புலிகள் இயக்கத்தை நிராகரிக்க வேண்டும் என்பதாகவும் கூறிக் கொண்டு யுத்தத்திற்குப் பால் வார்ப்பதிலேயே கவனமாக இருந்து வருகிறார். ஒட்டு மொத்தமாக நோக்கின் சந்திரிகா அம்மையார் பேச்சு வார்த்தை ஒன்றிற்கோ, யுத்த நிறுத்தத்திற்கோ அன்றி நியாயமான அரசியல் தீர்வுக்கோ தயாராக இல்லை என்பதையே அவரது அண்மைய கருத்துக்கள் எடுத்துக்கூறுகின்றன. ஆளும் நிலையில் உள்ள சந்திரிகா அம்மையாரும் அவரது அரசாங்கமும் யுத்தத்தை மும்முரமாக்குவதிலேயே முழுக் கவனத்தைச் செலுத்தி வருகிறது. அது தமிழர்களுடைய உரிமைகளை மறுப்பது மட்டுமின்றி யுத்தத்தை நடத்துவதால் ஒரு உயர் மட்ட பிரிவினர் பன் முகப்பயன் பாடுகளையும் லாபங்களையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பான தளமாகவும் இருந்து வருகிறது. அதேவேளை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பன்முக விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் யுத்தத்தைத் தகுந்த களமாக்கி வருகின்றனர். அத்துடன் தீவிர பேரினவாதிகளின் நாளாந்த ஆலோசனையுடனும் யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. சந்திரிகா அம்மையார் இத்தகைய பல்வேறு வளையங்களால் நன்கு சுற்றிச் சிறைவைக்கப்பட்ட கைதியாகவே இருந்து வருகிறார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்பது யுத்தத்தை நடத்துவதற்கு மட்டுமே பொருந்தக் கூடியதாக இருந்து வருகிறது. இந்நிலையில் யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு ஆகிய மக்களது விருப்பங்களும் அபிலாஷைகளும் காணல்நீராகவே காணப்படுகின்றன. இத்தகைய இக்கட்டான நிலையை நாடும் மக்களும் தாண்டிச் செல்ல மக்கள் மத்தியில் இருந்துதான் சரியானதும் உறுதியானதுமான முடிவுகள் தோன்ற வேண்டும். அதற்கான சூழலைத் தோற்றுவிப்பதே அரசியல் அரங்கிலே ஆற்றப்படவேண்டிய இன்றைய முக்கிய கடமையாகும்.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

# ஐக்கிய தேசியக் கட்சியின் பகல் வேஷம்

ஐக்கிய தேசிய கட்சி தேசிய இனப்பிரச்சினையிலும் தமிழ் மக்களையிட்டும் பகல் வேஷமிட ஆரம்பித்து விட்டது. அடிப்படையில் பேரினவாத நிலைப்பாட்டை முன்னெடுப்பதில் என்றும் முனைப்பாக இருந்து வரும் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். அக்கட்சிக்கு எப்போதும் தமிழர் மத்தியில் உள்ள நிலவுடமை, முதலாளித்துவ சக்திகளது ஆதரவு இருந்து வந்துள்ளது. இன ஒடுக்குமுறையை எவ்வளவிற்கு உக்கிரப்படுத்திய போதிலும் இச் சக்திகளது வர்க்க ஆதரவும் அடிவருடித்தனமும் அற்றுப் போகவில்லை. காரணம் இன உணர்வை விட வர்க்க பாசம் மிகப் பாரியதாகும். இதனை ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் உயர் வர்க்க சக்திகளும் பரஸ்பரம் புரிந்து கொள்வர்.

பதினேழு ஆண்டுகளாக தேசிய இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றி இன்றைய நிலைக்கு வளர்த்து எடுத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர் என்பதை அண்மைய வரலாறு துலக்கமாக எடுத்துக் காட்டும். அப்படி இருந்தும் கடந்த காலத்தில் எந்தப் பாவமும் செய்யாத அப்பாவிகள் போல இன்று தமிழ் மக்களுக்காக கண்ணீர் வடிக்க முற்பட்டுள்ளமை தான் வேடிக்கை தரும் விடயமாக உள்ளது.

அரசாங்கம் முன்வைத்த தீர்வுப் பொதியில் பிராந்தியங்களின் ஒன்றியம், காணிப் பங்கீடு உரிமை, பொலீஸ் அதிகாரம் வழங்குதல் போன்றவற்றை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக எதிர்த்து வருகிறது. தீர்வுப் பொதி தமிழர்களுக்கு கூடிய அதிகாரத்தை வழங்குவதாகக் குற்றம் சாட்டுகிறது. அப்படி ஒரு புறத்தில் நடந்தது கொள்வதுடன் பேரினவாதப் பிக்குமார்களையும் புத்திஜீவிகளையும் பின்னால் இருந்து உசுப்பி விடுகிறது. மேலும் யுத்தத்தைச் சரியான முகாமைத்துவத்துடன் நடத்த வில்லை என்றும் அரசியல் தலையீட்டை தவிர்த்து, இராணுவத்தை சுதந்திரமாக யுத்தத்தை நடாத்த விடுமாறும் வேண்டுகிறது.

அதேவேளை மறுபுறத்தில் வன்னி மக்களுக்காகவும் கொழும்புவாழ் தமிழர்களுக்காகவும் அழுது வடிக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. புலிகளுடன் பேசுமாறு வற்புறுத்து கிறது. மூன்றாவது தரப்பு மத்தியஸ்த்தத்தையும் வரவேற்கிறது. அரசாங்கம் அமெரிக்காவுடன் கூடிக் குலாவிக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி இந்தியாவைக் கட்டியனைத்து முத்தமிட முற்பட்டுள்ளது. தாங்கள் அடுத்து பதவிக்கு வந்தால் நிபந்தனை இன்றிப் புலிகளுடன் பேசி இனப்பிரச்சியைக்கு தீர்வு காணப் போவதாகவும் கூறி வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தப் பகல் வேஷத்தை நம்பிக் கொள்ள தமிழ் மக்கள் என்ன ஏமாளிகளா? அல்லது அறிவற்ற வெறும் முண்டங்களா? எல்லாம் அதிகாரப் பசியைத் தீர்த்துக் கொள்ளவே ஆகும். எப்படியும் எதைக் கூறியாவது அடுத்து பதவிக்கு வந்து விடவே ஐக்கிய தேசியக் கட்சி படாதபாடு படுகிறது. அதற்காக எத்தகைய வேஷத்தையும் போடத் தயாராகி நிற்கிறது. அது எத்தனை வேடமணிந்தாலும் அதன் அடிப்படையான பெருமுதலாளித்துவ பேரினவாத நிலைப்பாடு எவ்வகையான மாற்றத்தையும் பெறப் போவதில்லை. அதன் கடந்த காலம் இலகுவில் மறக்கப்பட முடியாத சாட்சியமாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# பசறைப் போராட்டம்
## உண்மைகளும் பொய்களும்

பசறை தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இரண்டு மாதங்களுக்கு மேலாகிறது. தோட்டக்கம்பெனிக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்ட "உடன்பாட்டை" அடுத்தே 51 நாட்கள் இடம்பெற்ற வேலை நிறுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. முடிவுக்கு கொண்டு வரப்படுகின்ற அன்று பசறை குருப் துரையின் பங்களாவிற்கு தீவைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடுத்தப்பட்டு 28 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். இன்னும் 33 பேர் கைது செய்யப்பட விருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன. இ.தொ.கா எம்.பி சென்னன், இ.தே.தோ.தொ. சங்கத்தின் வேலாயுதம் உட்பட சில தொழிற்சங்கத்தலைவர்கள் கைதுசெய்யப்படவிருப்பதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

பசறை தோட்டத்துரை குணதிலக்க என்பவரை பதவியிலிருந்து நீக்கும்படி கோரிக்கை விடுத்தே வேலைநிறுத்தம் நடை பெற்றது. தோட்டத்துரை தொழிலாளர்களை நசுக்கி கெடுபிடிகளை அதிகமாக்கி வந்தார். ஒருவருக்கு ஒரு நாள் சம்பளம் பூரணமாக வழங்கப்பட 17 கிலோவுக்கு மேலாக கொழுந்து எடுக்கும்படி கட்டாயப் படுத்தி வந்தார். ஒருவருக்கு ஞாயிறு போன்ற நாட்களில் வழங்கப்பட வேண்டிய ஒன்றரைநாள் சம்பளத்தை வழங்குவதில்லை. தேயிலை மலைகளில் திரியும் தொழிலாளர்களின் மாடுகளைப் பிடித்து தண்டத்தை விதித்து தண்டப்பணத்தை சம்பளத்தில் கழிப்பதுடன் பொலிசாருக்கூடாக நீதவான் நீதிமன்றிலும் வழக்குப் போடப்பட்டுள்ளது. சில மாடுகள் தோட்டத்துரையினால் வெட்டப் பட்டுள்ளன.

தோட்டப்பாடசாலைக்காக ஒதுக்கப் பட்ட காணியில் பௌத்த விகாரை யை கட்ட குறிப்பிட்டத் தோட்டத் துரை நடவடிக்கை எடுத்தி ருக்கிறார். தோட்ட வைத்தியசாலை 'பனடோல்' கூட இல்லாத நிலையில் விடப்பட்டுள்ளது. நகர வைத்திய சாலைக்கு நோயாளிகளை கொண்டுச் செல்ல வழங்கி வந்த வாகனவசதியையும் மறுத்துள்ளார். பசறை குருப்பிலுள்ள கமேவெல டிவிசனில் 50 ஏக்கர் காணியை சிங்களவர்களுக்கு பிரித்து கொடுக்க ஏற்பாடுகளை செய்துள்ளார்.

சில தொழிலாளர்கள் 26 நாட்கள் வேலை செய்தும் 23 நாட்களுக்கே சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது. 22 நாட்கள் வேலை செய்தவர்களுக்கு 14 நாட்களுக்கு சம்பளம் கொடுக்கப் பட்டுள்ளது. அதுபற்றி விளக்கம் கேட்ட இரண்டு தொழிலாளர்களை துரை தாக்கியதுடன் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார். அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டுள்ளது. பங்களா எரிப்பு சம்பவத்தையடுத்து பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டு காயத்துக்குள்ளான இ.தொ.கா தோட்டக்கமிட்டித் தலைவர் அந்தோனிசாமியும் தாக்கப்பட்ட தொழிலாளர்களில் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.



இவ்வேளை நிறுத்தம் பசறை குருப் முழுவதற்கும் பரவி பின்னர் அதற்கு ஆதரவாக அப்பகுதியிலுள்ள 57ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழிற்சங்கத் தலைவர்கள் கையெழுத்திட்ட உடன்படிக்கை தொழிலாளர்களுக்கு சாதகமானது என்று தொழிற்சங்கத் தலைவர்களால் குறிப்பிடப்பட்டது. ஆனால் உடன் படிக்கையின்படி தோட்டத் துரை குணதிலக்க பசறை குருப் துரையாக இருந்து குருப் மனேஜராக - அத்தியட்சகராக பதவியுயர்வை பெற்றுள்ளார். பசறை குருப் தொழிலாளர்கள் அவரது நேரடி நிர்வாகத்தின் கீழ்கொண்டு வரப்படாவிட்டாலும் முழு தோட்டத்துக்கும் பொறுப்பான பதவி அவரிடம் கொடுக்கப்பட்டது. பசறை குருப் இரண்டு பிரிவுகளாக்கப்பட்டு வேறு இரண்டு தோட்டத்துரைகளின் கண்காணிப்பின் கீழ் தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். பசறை குருப்பிற்கு ஒரு துரையை உடனடியாக தேடிப்பிடிக்க முடியாததால் மேற்படி இரண்டு பிரிவாக பிரிக்கப்படுவதாக கூறப்பட்டபோதும் இவ்வேற்பாடு தற்காலிகமானதென்று உடன் படிக்கையில் எழுதப்பட்டிருக்க வில்லை.

அத்துடன் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட மை காயும் முன்னரே தோட்டத்துரையின் பங்களாவுக்கு தீவைத்ததாக தொழிலாளிகள் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்க ப்பட்டுவிட்டனர். வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்ட விரகேசரி பத்திரிகை யாளர் நௌசாத் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டுள்ளார். அவர் இளைஞர் கழக கூட்டமொன்றை ஏற்பாடசெய்வதற்காக சோலன் டிவிசனுக்கு சென்றிருந்ததாக தெரிகிறது. அவரின் வாகனத்தில் இரண்டு தொழிலாளர் களும் அங்கு சென்றிருந்ததாகவும் சோலன் டிவிசன் தொழிலாளர்களை வேலைக்கு திரும்ப வேண்டாமென கேட்பதற்காகவே அவ்விருவரும் சென்றிருந்ததாக கூறப்படுகிறது.

பசறை குருப் போராட்டத்தில் ஆரம்பத்திலிருந்து இ.தொ.கா தலைவர்களில் ஒருவரான முன்னாள் ஊவா மாகாணசபை உறுப்பினர் சுப்பையா வேலைநிறுத்தத்தில் முக்கிய பங்கையும் வகித்து வந்துள்ளார். ஆனால் இ.தொ.கா தொழிலுறவு அதிகாரியான கனகராஜ் என்பவர் வேலைநிறுத்தம் இ.தே.தோட்டத்தொழிலாளர் சங்கத்தினராலேயே தொடங்கப் பட்டதாகவும் இ.தொ.கா தலையகத்திற்கு அறிக்கை செய்துள்ளார். பசறை குருப்பில் கலபட டிவிசனில் நலன்புரி அலுவலராக கடமையாற்றிய இ.தே.தொ. சங்க முன்னாள் தொழிலுறவு அதிகாரியின் மனைவியை குறிப்பிட்ட தோட்டத்துரை இடமாற்றம் செய்ததனாலேயே வேலைநிறுத்தம் தொடங்கப் பட்டதாக அவர் அறிக்கை செய்துள்ளார். அத்துடன் குறிப்பிட்ட தோட்டத்துரை தொழிலாளர்களுக்கு பல சலுகைகளை வழங்கிய தாகவும் கூறியுள்ளார். அவர் குறிப்பிட்ட துரைக்கு வாழ்த்து தெரிவித்து எழுதிய கடிதமொன்றும் பேச்சு வார்த்தையின் போது துரை அவருக்கு சார்பாக சமர்ப்பித் துள்ளார். அதாவது அவர் தொழிலாளர்களை இம்சித்திருந்தால்



பிரதான தொழிற்சங்கமான இ.தொ.கா. தன்னை வாழ்த்தி கடிதமொன்றை எழுதுமா என்று அவர் கேள்வி எழுப்பியிருந்ததாக அறிய முடிகிறது.

கனகராஜ் செய்த அறிக்கையின் விளைவாகவுமே இ.தொ.கா தலைமை வேலைநிறுத்தத்தில் அதிக அக்கறை செலுத்தவில்லை என்ற ஒரு சாட்டும் தெரிவிக்கப்படுகிறது. தொலைக் காட்சியில் மட்டுமின்றி பகிரங்க கூட்டங்களிலும் கூட இ.தொ.கா பசறை வேலைநிறுத்தில் பங்கெடுக்கவில்லை என்று அதன் தலைவர் எஸ். தொண்டமான் அடுத்தடுத்து கூறிவந்தார்.

தோட்டத்துரையொருவரை நீக்கும்படி கேட்பது தொழிற்பிணக்காகாது என்று நீண்ட தொழிற்சங்க வரலாற்றை கொண்டவராக கூறப்படும் தொண்டமான் குறிப்பிட்டதுதான் மிகவும் வேடிக்கையாக இருந்தது. ஆனால் அந்தக் குறிப்பிட்ட துரை றொக்கதன்ன என்ற தோட்டத்திலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் செய்த கறுப்புக்கொடி போராட்டத்தை அடுத்து இடமாற்றம் செய்யப்பட்ட வராவார்.

தற்போது விளக்கமறியலில் இருப்பவர்களில் 28 பேரில் 26 பேர் இ.தொ.கா அங்கத்தினர்களாவர். ஒருவர் இ.தே.தோ.தொ.சங்கத்தவர். மற்றயவர் பொதுசேவைகள் தோட்ட ஊழியர் சங்கத்தவர். இ.தொ.கா வின் அங்கத்தவர்களே பெரும்பாலான வர்களாக இருப்பதால் விளக்கமறியலில் இருப்பவர்களை பிணையில் எடுக்கும் சட்ட, அரசியல் நடவடிக்கையில் இ.தொ.கா தலைமை காரியாலயமே ஈடுபட்டுள்ளது. எனினும் நாட்கள் நீண்டுக்கொண்டு போகின்றன.

இந்நிலையில் பசறை தொழிலாளர்கள் பிழையாக வழிநடத்தப்பட்டதால் ஒழுங்கான தீர்வுமின்றி இருப்பதனுடன் சிறையில் இருந்து கஸ்டப்படுகின்றனர் என்று இ.தொ.கா தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட தோட்டத்துரையுடன் தொழிற்திணைக்கள மத்தியத் துவத்துடன் சுமுகமாக பேச்சுவார்த்தை நடத்த தொழிற் சங்கங்கள் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்த பின்னரே வேலைநிறுத்தம் .

11ம் பக்கம் பார்க்க

## பசறையில் சிந்திய குருதி

பசறை தோட்டத்து மண்ணிலே
அந்தோனிசாமி சிந்திய
குருதி உறைந்து போனது
குருதி உறைந்து போனது.
பருவ பெயர்ச்சி மழையாலும்
கழுவிச் செல்ல முடியாத
நீடிப்பான அச்செங்குருதி
மலையகம் எங்கும்
ஆழமாய் ஊறி
உறைந்து இருக்கிறது.
பல கேள்விகளை எழுப்புகிறது.
மலையகம் எங்கும்
ஆழமாய் ஊறி
உறைந்து இருக்கிறது
பல கேள்விகளை எழுப்புகிறது

பேரின வெறியுடன்
தொழிலாளரை நசுக்கிய
கொடிய தோட்டத்துரையை நீக்க
உருக்கு உறுதியுடன்
இறுகிய அய்க்கியத்துடன்
ஐம்பத்தியொரு தினங்கள்
வயிறு எரிய எரிய
தொழில் செயமறுத்தோருக்கே
வெற்றி என பறைசாற்றி
சங்கத்தலைவர்கள்
கைச்சாத்திட்ட சாசனம்
வெற்றி சாசனமா?
வெற்றி என பசைசாற்றி
சங்கத் தலைவர்கள்
கைச்சாத்திட்ட சாசனம்
வெற்றி சாசனமா?

அக்கொடிய துரைக்கு
பதவி உயர்வையும்
பசறை குருப்பை
பாதிகளாய் பிரித்தையும்
முப்பது உழைப்போரை
சிறைக்குள்ளே தள்ளியதையும்
உழைப்போர் மீது
அத்துரையின் பிடியை இறுக்கியதையும்
வெற்றி சாசனம் என்போமா?
வெற்று சாசனம் என்போமா?
உழைப்போர் மீது
அத்துரையின் பிடியை இறுக்கியதை
வெற்றி சாசனம் என்போமா?
வெற்று சாசனம் என்போமா?

வளரும் மலையகத்தில்
எத்தனை எத்தனை
பசறைகள் எழும்பும்?
பங்களாக்கள் தீக்குளிக்கும்
வெற்று சாசனங்கள் ஆகும்?
செழிக்கும் மலையகத்தில்
எத்தனை எத்தனை
மைந்தர்கள்
சிறை செல்வர்
குருதி சிந்துவர்
உயிர்க்கொடை செய்வர்.

பசறை பங்களா
அன்றொரு நாள்
தீயில் குளித்தவேளை
சங்கத் தலைவர்கள்
ஓடி ஒழிந்த இடங்கள்
பங்களா காடுகளா?
சடலங்களின் குழிகளா
சாம்பல் மேடுகளா?

– மலைமதி –

நன்றி - நூலகத்திட்டம்



# திக்குத் தெரியாத காட்டில்

## தந்தையும் மைந்தரும் (11)

'சிங்கள ஏகாதிபத்தியம்' என்ற பதம் தமிழரசுக் கட்சி மேடைகளில் அதிகம் பயன்பட்ட ஒன்று. ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்று அந்தக் கட்சியின் பிரமுகர்கள் பலர் அறிவார்களோ என்று சந்தேகப் படும்படியாக அந்தப் பதம் சகல சிங்கள அரசியற் தலைமைகளையும் வருணிக்கப் பயன்பட்டது. இடதுசாரிகள் கூட இந்தச் சிங்கள ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகள் என்றே காட்டப்பட்டனர். ஆயினும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தவிர்ந்த சிங்களப் பேரினவாதக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டணியில் தமிழரசுக் கட்சியும் ஒரு கூட்டாளியாக இணையும் பாக்கியத்தை அதன் தலைவரும் தீர்க்க தரிசியுமான செல்வநாயகம் அன்றே அறிந்திருந்தாரோ தெரியாது.

ஈழத்தில் ட்ரொட்ஸ்கியத்தின் பிதாவாக வருணிக்கப்பட்டவர் பிலிப் குணவர்தன. சமசமாஜக் கட்சியின் 'தங்கமூளை' என வருணிக்கப்பட்ட என்.எம். பெரேரா 1963ம் ஆண்டு உருவான இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஐக்கியத்தைக் குலைக்கும் விதமாக ஸ்ரீ.ல.சு.கட்சி ஆட்சியில் சமசமாஜக் கட்சியை இணைக்க எடுத்த நடவடிக்கையால் அடைந்த விரக்தியின் விளைவாக பிலிப் தனது எம்.ஈ.பியுடன் 1965ல் யூ.என்.பி. கூட்டு அரசாங்கத்தில் பங்காளியானார். அதைவிட பிலிப்பும் அவரது கட்சியும் 1965க்கும் பின்பு படிப்படியாக சிங்களத் தேசியவாத அரசியலுடன் சமரசம் செய்யத் தொடங்கி விட்டனர். 1965–1959 பண்டாரநாயக ஆட்சியின் போது சிங்கள இனவெறியின் குரல்களாக இருந்த ஆர்.ஜி.சேனநாயக, கே.எம்.பி. ராஜரத்ன போன்றோரும் ஸ்ரீ.ல.சு. கட்சியால் நிராகரிக்கப்பட்டு முடிவில் யூ.என்.பியுடன் 1965ல் கூட்டுச் சேர்ந்தவர்கள். இன்னும் ஐ.எம்.ஆர்,ஏ. ஈரியகொல்ல போன்ற கடைந்தெடுத்த சிங்கள இனவாதிகளும் பங்குபற்றிய ஒரு ஆட்சியில் தமிழ்க் காங்கிரஸ் இருந்ததில் வியப்பில்லை. ஏனெனில் அது பொதுவாக எப்போதுமே யூ.என்.பி.யின் நிழலையே நாடிய கட்சி. தமிழரசுக்கட்சி 'ஏழுகட்சிக் கூட்டணி' என்று கேலி செய்யப்பட்ட இந்தக் கூழ்ப்பானைக்குள் விழுந்தது அதன் முன்னைக்கால அரசியல் விளக்கங்கள் எல்லாவற்றையும் கேள்விக்கு இடமாக்கி விட்டது.

யூ.என்.பி.யின் தலைவராகவும் பிரதமராகவும் இருந்த டட்லி சேனநாயக ஒரு கனவான். சொன்ன வார்த்தை தவறமாட்டார் என்ற நம்பிக்கையின் பேரில் தமிழரசுக் கட்சி யூ.என்.பியுடன் கூட்டாட்சிக்கு உடன்பட்டது என்றால், அது அரசியலில் எதையுமே படிக்க வில்லை என்பதை விட வேறெதையுமே சொல்வதற்கு இடமில்லை. டட்லி சேனநாயக ஒரு உறுதியான தலைவரல்ல என்பதற்கான ஆதாரம் 1953 ஹர்த்தாலின் பின்பு அவரது அரசியல் அஞ்ஞாதவாசத்திற் தெரிந்திருக்க வேண்டும். யூ.என்.பி யினுள் இருந்த சிங்களப் பேரினவாதிகள் அக்கட்சியில் ஆதிக்கம் செலுத்தினர் என்பதைத் தமிழரசுத் தலைமை அறியவில்லை என்று கூறவும் முடியாது. 1960 ஜூன் தேர்தலில் டட்லி சேனநாயக தலைமையிலேயே தமிழருக்கு விரோதமான துண்டுப்பிரசுர விநியோகம் நடைபெற்றது. ஜே.ஆர். ஜயவர்தனவின் சிங்களப் பேரினவாதமும் யூ.என்.பி யினுள் அவரது செல்வாக்கும் தமிழரசுக்கட்சி அறியாததல்ல. அதைவிட முக்கியமாக, யூ.என்.பி 'கனவான்களின் கட்சி' என்ற பழைய படிமத்தை மாற்றி ஒரு பொதுசனக் கட்சியாகத் தன்னைக் காட்டும் தேவையாலும் தனது வலதுசாரி அரசியலுக்கு அவசியமான ஒரு உதிரிப் பாட்டாளி வர்க்கத் தனத்தை விரிவு படுத்தி வந்தது. இந்த அரசியலின் விளைவாக சுகததாச, பிரேமதாச போன்றோர் அக்கட்சியில் வேகமாக முன்னேறினர்.

இத்தகைய ஒரு பின்னணியில் ஸ்ரீ.ல.சு.கட்சி 'டட்லி–செல்வா' உடன்படிக்கை எனப்பட்ட இரகசிய ஏற்பாட்டை எதிர்க்காமல் விட்டிருந்தாலும் கூட, அதற்கு யூ.என்.பி யினுள்ளிருந்தே குழிபறிக்கப் பலர் காத்திருந்தனர் என்பது தமிழரசுக் கட்சிக்கு விளங்க அதிக காலம் எடுத்திருக்காது. தமிழரசுக்கட்சி தனது பாராளுமன்ற ஆசன எண்ணிக்கை வலிமையைக் காட்டி யூ.என்.பி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதாக மிரட்டித்தான் கேட்டதைப் பெற முடியும் என்று எண்ணி இருந்தால் அது வெறும் கனவுதான். ஏனெனில் டட்லி–செல்வா உடன் படிக்கைக்கு முன்னரே தமிழரசுக் கட்சி ஸ்ரீ.ல.சு.கட்சியையும் பாராளுமன்ற இடதுசாரிகளையும் பகைக்கும் விதமாக நடந்து கொண்டு விட்டது. தமது கூட்டாளிகளை மாற்றி நாட்டை ஆளுவது யார் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதற்கான வாய்ப்பைத் தமிழரசுக் கட்சிக்கு வழங்க ஸ்ரீ.ல.சு.கட்சியின் இடதுசாரிக் கூட்டாளிகள் அனுமதித்திருப் பார்களோ என்பதும் சந்தேகமானது.



தமிழரசுக் கட்சி அதிகபட்சம் யூ.என்.பி. ஆட்சியைக் கவிழ்க்க உதவியிருக்கலாம். அதற்கு மேலாகத், தென்னிலங்கை அரசியலின் போக்கை நிர்ணயிக்க அதற்கு வலிமை இருக்கவில்லை.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, தமிழரசுக் தலைமை வெகுஜன அரசியலுக்கும் தனக்கும் வெகுதூரம் என்பதை அறிந்து விட்டது. பாராளுமன்ற அரசியல் மூலம் எதையாவது சாதிப்பது என்றால் ஆளுங்கட்சியுடன் உறவாடியே அதைச் செய்யலாம் என்பதை அது உள்ளார அறிந்தாலும் அதை வெளிவெளியாகச் சொல்ல முடியவில்லை. திருச்செல்வத்தை அமைச்சராக்கி நாடகமாடிய போதும் தமிழரசுக் கட்சியின் அரசியல் குத்துக்கரணத்தை அடையாளம் காணமுடியாதளவுக்குத் தமிழ் மக்கள் அரசியல் குருடர்களல்ல. எனவே தமிழரசுக்கட்சித் தலைமை யினர் ஆளுங்கட்சியில் பங்காளிகளாக உள்ள காலத்தில் தமது வர்க்க நலன்கட்டும் தனிப்பட்ட நலன்கட்டும் செல்வாக்குக்கும் பயன்படக் கூடிய காரியங்களில் தமது கவனங் காட்டத் தொடங்கினார்கள்.

**1965ல் 'ஏழு கட்சிக் கூட்டணி' அமைக்கப்பட்ட யூ.என்.பி அரசாங்கத்தில் பச்சை இனவாதிகளுடன் இணைந்து தமிழரசுக்கட்சி மந்திரிப் பதவி பெற்று இணைந்து கொண்டது.**

1966 முடிவிலெயே தமிழரசுக்கட்சிக்கு டட்லி சேனநாயக வாக்களித்த மாவட்ட சபைகள் கிடைக்காது என்ற உண்மை விளங்கியிருக்க வேண்டும். 1967ல் அது பற்றிய ஐயத்துக்கே இடமில்லை. ஆயினும் ஆட்சியில் தொடர்ந்தும் தொங்கிக்கொண்டு இருந்ததற்கான ஒரே காரணம் அவர்களுக்கு வேறு வழியேதும் தெரியாதது தான். இந்தக் கால கட்டத்தில் முக்கியமான ஒரு சர்வதேச நிகழ்வும் ஒரு உள்நாட்டு நிகழ்வும் தமிழரசுத் தலைமையின் தன்மையை அப்படியே படம் பிடித்துக் காட்டின.


முழு உலகின் கவனத்தையும் ஈர்த்த வியற்னாம் போர் உக்கிரம் பெற்ற காலம் அது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு யுத்தம் முற்போக்குச் சக்திகளை மட்டுமல்லாமல் அமெரிக்காவின் தாராளவாதிகளது எதிர்ப்பையும் சந்தித்த காலம் அது. ஆயினும் யூ.என்.பி. ஆட்சி அமெரிக்காவின் போரை ஆதரித்தது. தமிழரசுக் கட்சியும் அதில் இணைந்தது. சாதியத்துக்கு எதிரான எழுச்சி வடக்கில் சாதியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களது வரலாற்று முக்கியமான ஒரு போராட்டமாக 'விரிவுகண்ட காலமும் அதுவே. அதையும் தமிழரசுக் கட்சி எதிர்த்து இழிவு செய்தது. கலாசாரப் புரட்சியையும் வியற்னாம் போராட்டத்தையும் சாதியத்திற்கு எதிரான போராட்டத்தையும் ஒரே தளத்தில் வைத்து எதிர்த்ததில் தமிழரசுக் கட்சியின் பார்வை அதன் முதலாளிய, நிலவுடைமை வர்க்க அடிப்படையில் மிகவும் சரியானது தான். எனவே வடக்கின் ஒடுக்கப்பட்ட மக்களது நியாயமான போராட்டங்களை அரசாங்கம் தனது காவற்படைகளைப் பாவித்து அடக்க வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி கேட்டுக் கொண்டது. இதை விட முக்கியமான எந்த அரசியற் கொள்கையிலும் தமிழரசுக் கட்சி அந்தகால கட்டத்தில் உறுதியாக நின்றதாகத் தெரியவில்லை. அக் காலத்தில் குறிப்பாக வடக்கில் இடம் பெற்ற தொழிற்சங்க இயக்கத்திலும் முதலாளிகள் பக்கம் பகிரங்கமாக நின்று தமது தொழிலாளர் விரோத நிலைப்பாட்டையும் அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டனர்.

**வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்காவின் பக்கத்தில் நிற்பதற்கு தமிழரசுக் கட்சி எவ்வித கூச்சமும் கொள்ளவில்லை. அதே போன்று சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை சீனத்துடன் இணைத்து இழிவுபடுத்திப் பிரசாரம் செய்யவும் தயங்கவில்லை.**

தமிழரசுக் கட்சி 1970ல் பொதுத் தேர்தலை எதிர் நோக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அறிந்திருந்தது. யூ.என்.பியுடன் கூடியிருந்து எதையுமே வென்றெடுக்காத நிலையில், தமிழரசுக் கட்சியால் யூ.என்.பியின் கூட்டாளியாகத் தேர்தலில் நிற்க முடியாது. ஆயினும் 1967 அளவிலேயே விலகியிருந்தால் அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்து பெறுகிற சலுகைகள் போயிருக்கும். எனவே 1968 முடிவில் திருகோணமலை கோணேசர் கோவிற் பகுதியை புனித நகராக்கும் யோசனையை மையமாக வைத்துத் தமிழரசுக் கட்சி செனெற்றரும் உள்ளூராட்சி அமைச்சருமான திருச்செல்வம் தனது அமைச்சர் பதவியிலிருந்து விலகினார். ஆயினும், 1970 தேர்தல் வரை அரசாங்கத்திற்குத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு தொடர்ந்தது. 1965–70 காலகட்டத்தில் தமிழரசுத் தலைமை யூ.என்.பியுடன் ஏற்படுத்திய உறவின் நெருக்கமே 1977 இனவாத வன்முறை, 1981 நூலக எரிப்பு, 1983 இனவாத வன்முறை போன்ற பல நிகழ்வுகளையும் தாங்கும் இதயத்தையும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்ற பேரில் ஜே.ஆர். ஜயவர்தன தமிழரசுத் தலைமையைக் கோமாளிகளாக்கி யதை அலட்சியம் செய்யுமளவுக்குத் தடித்த தோலையும் தமிழரசுத் தலைமைக்கு வழங்கியிருக்க வேண்டும்.

மக்களைப் பொறுத்த வரை 1965–70 காலகட்டத்தில் தமிழரசுக் கட்சியின் பங்களிப்பு பற்றிய அதிருப்தியே அதிகமாக இருந்தது. தமிழரசுக் கட்சி வடக்கு–கிழக்கின் ஒரே முக்கிய தேசியவாத அரசியற் கட்சியாக இருந்தும் பாராளுமன்ற இடதுசாரிகளின் சீர்குலைவும் இடதுசாரி இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுகளும் வலிய ஒரு மாற்றுச் சக்தியை முன்வைக்க இயலாமற் செய்துங் கூட, 1970 பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சில பெரிய அதிர்ச்சிகளைப் பெற்றது. 'தமிழரசுத் தளபதி' வட்டுக்கோட்டையில் கண்ட தோல்வியின் வரலாற்று முக்கியம் பெரியது.

# தோழர் மணியம் நினைவாக



உலகின் உறுதிவாய்ந்த ஒவ்வொரு நேர்மையான கம்யூனிஸ்டும் தான் இறக்கின்ற போது தன்னுடன் வாழ்ந்தவர்களுக்கும் எதிர்காலத் தலைமுறையினருக்கும் மிகப் பெறுமதி வாய்ந்த செல்வாதாரங்களை விட்டுச் செல்கிறார்கள். அவை வெறும் சொத்து சுகங்களாகவோ அர்த்தமற்ற வாழ்க்கை அனுபவங்க ளாகவோ இருப்பதில்லை. பதிலுக்கு தம் வாழ்நாளில் பெறப்பட்ட போராட்ட நடைமுறை அனுபவ மெனும் அரும் பெரும் செல்வமாகவே இருக்கும். இத்தகைய அளப்பரிய செல்வத்தைத் தேடுவதற்கு கம்யூனிஸ்டுகள் என்போர் செயலாற்றியும் போராடியும் வந்துள்ளனர். இவ் உலகின் சமூக அசைவியக்கத்தை மனிதர்களின் வாழ் நிலையை வர்க்கப் போராட்டத்தின் வளர் திசையை தெளிவாக அடையாளம் கண்டு அவற்றுக்குரிய பாதையில் பயணம் செய்து வந்துள்ளனர். மார்க்சிசமும் அதன் பின் லெனினிசமும் அதனைத் தொடர்ந்த மாஓசேதுங் சிந்தனையும் இன்னும் பிறவழிகாட்டல்களும் உலக கம்யூனிஸ்டுகளின் மாபெரும் அனுபவங்களாகி வழிகாட்டும் ஒளி விளக்குகளாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. தெளிவான தத்துவார்த்தக் கோட்பாடு, திடமான குறிக்கோள், தியாகமும் அர்ப்பணிப்பும் – எளிமையும், நேர்மையும் கொண்ட வாழ்க்கை முறை என்பன கம்யூனிஸ்டுக்கள் புது வார்ப்பினர் என்பதற்கான அடையாளங்கள். நாட்டை நேசித்து மக்களுக்கு சிரம் தாழ்த்தி உழைக்கும் வெகுஜனங்களை அணி திரட்டி ஆளும் வர்க்க அநீதிக்கும் அடக்கு முறைகளுக்கும் எதிராகப் போராட்ட முனைகளிலே முன்னணியில் நிற்பவர்கள் கம்யூனிஸ்டுக்கள். அவர்கள் சிறுகச் சிறுகச்சேர்ந்துப் பெருக்கிய வளம் மிக்க செல்வாதாரமே பின்னை வரும் புதிய தலைமுறையினருக்கு உரத்தையும் உறுதியையும் வழங்குகின்றது. அத்தகைய அடியாதார அடித்தளத்திலிருந்து புதிய தலைமுறைக் கம்யூனிஸ்டுக்கள் என்போர் புதிய புதிய வீச்சுக்களையும் வேகங்களையும் பெற்று முன்னே செல்கின்றனர். இது தான் கடந்த 150 ஆண்டு காலக் கம்யூனிஸ் டுக்களின் வரலாறாகும். அந்த வரலாறு தான் நீடித்து முன்னோக்கி வீறு நடை

10ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு உதிரிப் புத்திஜீவியின் ஊளை!

## பாவம் பேராசிரியர்

போராளிகளில் உன்னதமானவர்கள் தோல்விகளின் விளைவாக மேலும் மனவுறுதி பெறுகிறார்கள். சாதாரணமானவர்கள் தோல்விகளினால் துவண்டு விடுகிறார்கள். கேவலமானவர்கள் எதிரியிடம் சரணாகதி அடைகிறார்கள். இத்தகையோர் பட்டம் பதவி உடையோராக இருந்தால் அவர்கள் ஒடுக்கு முறையாளர்கட்கு மிகவும் விருப்பமானவர்களாகி விடுகிறார்கள். நடுத்தர வர்க்கப் புத்திஜீவிகள் எனப்படுவோரிடம் அவர்களது வர்க்கத்திற்கேற்ற சபலம் அதிகம். வெல்லுகிற கட்சியாக எதைக் காண்கிறார்களோ அதை நாடி ஒடுவது அவர்களது தவிர்க்க முடியாத தன்மை. நெருக்கடியான காலங்கள் தான் உறுதியான நெஞ்சங்களின் உரைகற்கள். 1977ல் யூ. என். பி வென்ற பின்பு, 1960களிலும் 70களின் முற்பாதியில் தீவிர இடதுசாரிக் கோஷம் எழுப்பிய பல புத்திஜீவிகளும் படைப்பிலக்கியகாரரும் தேசியவாதம், பெண்ணியம், பிரதேசவாதம் என்ற விதமாகவும் சிலர் கூச்சம் எதுவும் இல்லாமல் ஆளுங்கட்சியிடம் தஞ்சமடைந்தும் சீரழிந்தார்கள். அது அவர்களது நிசமான வர்க்க நிலைப்பாடு.

1990ல் சோவியத் யூனியனின் சரிவு தடுமாறும் நெஞ்சங்களின் பெரிய சோதனையானது. மாக்ஸியம் பொய்த்து விட்டது என்ற பொய்யை நம்பித் தாங்கள் அதுவரை ஒப்புக்காவது பேசி வந்த மாக்ஸியத்தைக் கை கழுவினவர்கள் சிலர். அதை வெளிவெளியாகச் சொல்லிய அளவில் அந்தளவு நேர்மையையாவது பாராட்டலாம். ஆனால் தம்மை இன்னமும் ஏதோ வகையான மாக்ஸியர்களாகக் காட்டிக்கொண்டு மாக்ஸியத்தைக் கொச்சைப்படுத்தி இழிவுசெய்கிற ஒரு கூட்டம் இன்று பன்னாட்டு என். ஜீ. ஓ.க்களின் மூலம் பிழைப்பு நடத்துகிறது. இந்த மோசடி சிலகாலமாகவே இலங்கையிலும் பிற தென்னாசிய நாடுகளிலும் நடந்து வருகிறது. இது பற்றிப் புதிய பூமியில் முன்பு மேலோட்டமாகவே எழுதப்பட்டது. ஒக்டோபர் இறுதியில் கொழும்பில் உள்ள ஒரு என்.ஜி.ஓ. 'மாக்ஸியமும் இலக்கியமும்' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேராசிரியர் சண்முகரத்தினம் என்கிறவர் (அன்று இலங்கையர், சிலகாலம் சென்று தமிழீழத்தவர், தொடர்ந்து ஜப்பானியர், இன்று நோர்வீஜியர்) தன்னை ஒருவகையான மாக்ஸியராகக் காட்டிக் கொண்டு இலக்கியம் சம்பந்தப்படாத ஒரு தலைப்பில் மாக்ஸியம் ஒரு சமூக மாற்றச் சக்தியாகப் பயனற்று விட்டது என்று பேசி அங்கு வந்திருந்த மாக்ஸிய விரோத மனநோயாளிகள் சில பேருக்கு ஆனந்தமளித்தார். அந்த என். ஜீ. ஓ. அமைப்பு இதை வேண்டுமென்றே செய்ததா என்பது பற்றி நமக்குள் கேள்வி எழாமல் இல்லை.

இந்தப் பேராசிரியப் பெருந்தகையின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றியோ குணாம்சங்கள் பற்றியோ இங்கு எழுதுவது முறையாகாது. ஆயினும் இடையிடை மாக்ஸியச் சார்பான சிந்தனையாளராகத் தன்னை அடையாளங் காட்டி வருகிற இவரது அரசியலின் கடந்த காலத்தைக் கவனித்தால் மாக்ஸியம் பற்றி அவரது இன்றைய கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன என்று விளங்கும். அவற்றுள் முக்கியமான ஒரு சிலதை நமது குறிப்புக்களுடன் வாசகர்கள் முன்பு வைக்கிறோம். வாசகர்கள் தங்கள் சொந்த முடிவுகட்கு வரலாம்.

### அமெரிக்க ஏகாதிபத்தியம் என்பது இருக்கிறதா? சண்முகரத்தினம் என்ற 'பேராசிரியர்' கேட்கிறார்

பல்கலைக் கழக மாணவப் பருவத்தில் தீவிர இடதுசாரி அரசியல் பேசி சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி எனக் கூறப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவான மாணவர்களுள் ஒருவராக இருந்து மாணவர் சங்கத் தலைவராகி 1965ல் பொலிசாருடன் பேராதனை மாணவர்கள் மோதிய போது தலையில் அடி பட்டது இவரது அதிகபட்ச அரசியற் தகுதி. 1970களிலும் தோழர் சண்முகதாசனுடைய ஆதரவாளராக இருந்துவந்த அதே வேளை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்த ஜனவேகய குழுவில் வலுவான தொடர்புகளையும் கொண்டிருந்தார். (இந்தக் குழுவில் ஒருவர் திருமதி பண்டாரநாயகவின் முன்னாள் மருமகனும் சர்ச்சைக்குரிய என்.ஜீ.ஓவான இன்டர் நாஷனல் அலேட்டின் தலைவராக இருந்து பதவி விலகுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டவருமான குமார் ரூபசிங்ஹ. இவரும் நீண்டகாலம் நோர்வேயில் வாழ்ந்தவர்.)

கம்யூனிஸ்ட் கட்சியில் இவரது பங்குபற்றலும் செயற்பாடும் 1970க்குப் பின்பு குறைவாகவே இருந்தாலும் "முற்போக்கு" எழுத்தாளர் சங்க வட்டத்திலும் 'சீன சார்பு' கம்யூனிஸ்ட் கட்சியின் புத்திஜீவிகளுடனும் தொடர்பு இருந்தது. இக் காலகட்டத்தில் இவர் தன்னை ஒரு தீவிர இடதுசாரிச் சிந்தனையாளராகவும் இலக்கியத் திறனாய்வாளராகவும் காட்டிக்கொள்ள மிகவும் முயன்றார். தன்னைச் சூழ ஒரு சிறு வட்டத்தையும் வைத்திருந்தார்.

தங்களை விட்டால் இலங்கையில் தமிழில் இலக்கியம் படைக்க யாருமே இல்லை என்று மார்தட்டிக்கொள்கிற கும்பல் ஒன்று 'இடதுசாரி எழுத்தாளர்' என்ற பேரில் செய்து வந்த சில தவறான காரியங்களால் பல நல்ல சக்திகள் இடதுசாரி அரசியலைப் பகைமையுடன் காண நேர்ந்தது. தமிழில் நாடகங்கள் பற்றி இந்த நபர் 1980ல் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகளின் . போலி

### மாக்சிசத்தை எதிர்த்து சிதைப்பதற்கு என்.ஜீ.ஒ முகவர்களுக்கு பேராசிரியர்கள் தேவைப்படுகிறார்கள்.

இடதுசாரித்தனமும் குறுகிய கோஷ்டிவாதமும் சி. சிவசேகரம், ஏ. ஜே. கனகரத்தினா ஆகியோரால் நார்நாராகக் கிழிக்கப்பட்டன. இவ்வாறே கலைகளில் அழகியல் பற்றி இவரது கொச்சைப்படுத்தல் உருவத்துக்கும் உள்ளடக்கத்துக்குமான முரண்பாடு பற்றிய உளறலாக 'சற்றடே றிவியூ' என்ற யாழ்ப்பாண வார ஏட்டில் வந்து றெஜி சிறிவர்த்தனவால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

இந்தத் 'தீவிர இடதுசாரி' 1983 வன்முறைக்குப் பிறகுதான் திடீரென்று தன்னை ஒரு தமிழன் என்று கண்டுபிடித்ததாகவும் ஈழத் தமிழ்த் தேசம் என்று ஒன்று விடுதலை பெறாமல் தன் போன்ற தமிழர்கட்குக் கதி இல்லை என்றும் விளக்கி ஒரு நீண்ட புத்தகத்தை சமுத்திரன் என்ற பேரில் தமிழ்நாட்டில் வெளியிட்டு விட்டு ஜப்பானுக்குப் போய் அங்கிருந்து நோர்வேயில் குடியேறினார். தமிழீழ விடுதலை இயக்கங்களின் குளறுபடிகளின் பின்பு தமிழீழம் பற்றிய நம்பிக்கை தளர்ந்து விட்டதால் குழப்பமான நிலையில்



இவர் தான் அந்தப் பேராசிரியர்

இவரது அரசியல் தொடர்ந்தது.

ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் யூ.என்.பிக்கும் வேறுபாடு இல்லை என்ற விதமாக என்.எல்.எவ்.டி. என்ற 'இடதுசாரித்' தமிழீழ விடுதலைக் குழு வெளியிட்ட சஞ்சிகையில் இவர் எழுதிய ஒரு கட்டுரை இவரது அரசியல் வெறுமையை அவர்களுக்கும் வெளிக்காட்டி விட்டது. பின்பு புலம்பெயர்ந்து தமிழரின் ஐரோப்பிய இலக்கியச் சந்திப்புக்களில் இடைக்கிடை தலை காட்டி மாக்ஸியத்தைப் பற்றிய ஆய்வு என்ற பேரில் பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய தனது அவநம்பிக்கையை வெளிப்படுத்த அத்திவாரம் இடத் தொடங்கினார். இது 1990க்குப் பிறகு என்று ஊகிப்பதில் யாருக்கும் சிரமம் இராது.

1995ல் சந்திரிகா குமாரணதுங்க அதிகாரத்திற்கு வந்த பிறகு இவரின் ஒழுங்கான இலங்கை விஜயங்கள் ஆரம்பமாயின. சந்திரிகா குமாரதுங்கவின் பூரண ஆதரவாளராகத் தன்னை காட்டிக்கொண்டார். பின்பு திறந்த பொருளாதாரக் கொள்கை பற்றி நாம் திறந்த மனதுடன் நோக்க வேண்டும் என்று இவர் கருத்துக் கூறிய நேர்காணல் இங்குள்ள ஒரு என்.ஜீ.ஓ. தமிழ்ப் பத்திரிகையில் வெளியானது.

இரண்டு மூன்று ஆண்டுகள் முன்பு ஒரு வருகையின் போது பெண்ணியம், தலித்தியம், பெரியாரியம் எல்லாவற்றுடனும் மாக்ஸியம் சமரசம் செய்ய வேண்டும் என்று ஒரு வெடிகுண்டைப் போட்டார். இதன் பின்பும் இவரை ஒரு மாக்ஸிய மேதாவியாக நினைத்து நேர்காணல் பெறுகிற ஏடுகள் இங்கு உள்ளன. இனி இவர் 98 ஒக்டோபர் முடிவில் நடந்த கூட்டத்திற் பேசியவற்றை மேற்சொன்ன அரசியல் பின்னணியில் வைத்துப் பார்ப்போம். ஸ்டாலின்–ட்றொட்ஸ்கி, ஸ்டாலின்–புக்காரின், விவாதங்களைப்பற்றித் தன்னுடைய பழைய கால நிலைப்பாடுகளை 'பின்னோக்கிய பார்வையில்' தவறாக எண்ணுவதாக அவர் சொன்னார். கம்யூனிஸ்டுகளின் மூன்றாவது அகிலத்தின் தொடர்ச்சியான கொமின்டேணின் நடவடிக்கைகள் பற்றியும் இலங்கையில் ட்றொட்ஸ்கி வாதிகள் உலக யுத்தத்தில் ஹிட்லருக்கு எதிரான போரில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை ஆதரிக்க மறுத்தது தவறு என்ற தனது பழைய நிலைப்பாடு பற்றியும் அவர் தனது மனதை மாற்றி விட்டாராம். அவருக்கு இந்த மாதிரி ஞானோதயம் அடிக்கடி ஏற்படுவது நாங்கள் கண்டறிந்த விசயம் தானே. எனவே மாக்ஸியம் சமூக மாற்றத்திற்கான சக்தியாக இனிச் செயற்படாது என்ற அவரது தீர்ப்பைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டாம். அவர் நமது மக்களை ரட்சிப்பதற்கு முன்வைத்திருக்கிற அற்புதமான ஆலோசனைகளை மட்டும் பார்ப்போம்.

மாக்ஸியம் உலகை மாற்றுவதற்கான ஒரு தத்துவம் என்ற நிலைமை இனி இல்லையாம். உலகை அறிவதற்குக் கொஞ்சம் உதவுகிற அளவில் மட்டும் அதற்குக் கொஞ்சம் உபயோகம் இருக்கிறதாம். மாக்ஸியம் வேண்டி நிற்கும் சமத்துவமான உலகம் வெறும் கற்பனை என்கிறார். எனவே இன்றைய' ஏற்றத் தாழ்வுகள் என்றென்றைக்குமானவையே என்பது அவரது முடிவு. அப்போது, ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்காலம்? தாராளவாதத்தில் தான் அது தங்கியுள்ளதாம், பொருளாதார தாராளவாதம் மூன்றாமுலக நாடுகட்குக் கொஞ்சம் கெடுதல் செய்தாலும் அது யதார்த்த நிலவரம். மேலை நாடுகளில் உள்ள அரசியல் தாராளவாதம் ஜனநாயகத்துக்கும் மனிதஉரிமைக்கும் சுற்றாடலுக்குமான பிரச்சனைகளில் அக்கறை காட்டுவதால் அதனை நம்பியே மூன்றாமுலக நாட்டு மக்களின் எதிர்காலம் அமைந்துள்ளது. பரவாயில்லையே எல்லாரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை பண்ணுங்கள் என்று சொல்லாமல் விட்டாரே புண்ணியவான். பழைய நாத்திகம் அவரில் இன்னமும் கொஞ்சம் ஒட்டியிருக்கிறது போலும்.

ஆயுதமேந்திய போராட்டம், மக்கள் யுத்தம் என்பனவெல்லாம் பயனில்லாத விஷயங்கள் என்பதும் இன்னொரு அற்புதமான முடிவு. "துப்பாக்கிக் குழாயிலிருந்து தான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது" என்பதெல்லாம் பழங்கதை என்பது அவரது புதிய ஞானம். அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக நாடுகள் ஒவ்வொன்றையும் ஆயுதங்களைக் காட்டியா மிரட்டுகிறது? தனது தாராளவாத ஆன்மிக வலிமையாலல்லவா ஈராக், ஈரான், ஆப்கானிஸ்தான் போல எல்லா உலக வில்லன் நாடுகளையும் கட்டி வைத்திருக்கிறது.

அது மட்டுமா? அமெரிக்க ஏகாதிபத்தியம் என்று யார் சொன்னார்கள்? இப்போது பன்னாட்டு நிறுவனங்கள் எல்லா நாடுகளிலும் கால் பதித்து நிற்பதால் அமெரிக்க ஏகாதிபத்தியம் என்று ஒன்று இல்லை என்பதும் இன்னோரு அற்புதமான கண்டுபிடிப்பு. பன்னாட்டு நிறுவனங்களது நலன்களை எந்த அரச இயந்திரம் முன்னின்று காக்கிறது? இன்றும் அமெரிக்கா அல்லவா ஐ.நா சபை மூலம் உலக வங்கி சர்வதேச நாணய சபை போன்ற அமைப்புக்கள் மூலமும் உலக நாடுகளை ஆட்டி வைக்கிறது என்று கேட்காதீர்கள். அமெரிக்கா தனது படைகளை அனுப்பவே அனுப்பாது. ஒரு வேளை ஏவுகணைகளை வீசும். உயர இருந்து குண்டு போடும். ஆனாலும் ஒருநாளும் தனது படைகளை ஆனுப்பவே அனுப்பாது. அதற்கான கூலிப் பட்டாளங்களைத் தான் தயார் செய்து பல வேறு நாடுகளில் வைத்திருக்கிறதே. அப்படியிருக்க, அமெரிக்கா முன்பு வியற்னாமிலும் வேறு இடங்களிலும் செய்தது போல இன்னனொரு தடவை செய்து வம்பில் மாட்டிக்கொள்ள அவர்கள் முட்டாள்களா? பின் நவீனத்துவ ஆய்வுமுறை பற்றிய அவரது அங்கீகாரமும் குறிப்பிடத்தக்கது. அதே கூட்டத்தில் பேசிய கலாநிதி நு:.மான் தான் அன்றும் இன்றும் நிதானம் தவறாத ஒரு சிந்தனையாளர் என்பதைத் தனது தெளிவான உரை மூலம் உறுதிப் படுத்தியதோடு பின் நவீனத்துவம் என்பது இன்றைய பன்னாட்டுக் கம்பெனிகளின் உலகமயமாக்கல் கொள்கைக்கு அத்தியாவசியமான ஒரு கோட்பாடு என்று ஐயத்துக்கிடமில்லாது கூறினார். நோர்வேப் புத்தி சிகாமணியின் சிந்தனைகள் யாருடைய நலன் சார்ந்தவை என்பதற்கு இதை விட விரிவான விளக்கம் வேண்டுமா?

புத்திஜீவிக் கூலிப் படைகளுக்கு இப்போது பஞ்சம் இல்லை உதிரிப் பாட்டாளி வர்க்கம் என்று விபசாரிகள் உட்பட்ட பல விளிம்பு நிலை மக்களைக் கூறுவார்கள். அவர்கள் நெருக்கடியான நிலைகளில் ∴ பாஸிஸம் போன்ற சக்திகளுடனும் இணையலாம். புரட்சிகரமான சூழ்நிலைகளில் பாட்டாளி வர்க்கத்துடனும் சேர இடமுண்டு. தமது அறிவாற்றலை ஒடுக்குமுறையாளர்களிடம் அடமானம் வைக்கும் புத்திஜீவிகளை நாம் உதிரிப் புத்திஜீவிகள் எனலாமா? இவர்களை விடப் பிக்பொக்கற் காரர்கள் மரியாதைக்குரியவர்கள்.

இந்திரன்

நன்றி - நூலகத்திட்டம்



## அக்கம் பக்கம்

ஐ.ஐ.ஓ

# ஆட்சி, மொழி, மக்கள்

இலங்கையின் ஆட்சி மொழி யாது? இன்று ஒரு கேள்வியை நாம் கேட்டால், சட்டப்படி சிங்களம் ஆட்சி மொழி எழுத்தளவில் தமிழும் அரசகரும மொழி, ஆங்கிலமும் செல்வாக்கு மிகுந்த உத்தியோக மொழி தான் என்று கூறலாம். ஆனால் நடைமுறையில்?

பெரும்பான்மை மொழியினரின் பிரதேசங்களிலே, ஆட்சி மொழியைப் பொறுத்தவரை சிங்களம் மக்களுக்கு அதிக பிரச்சனை இல்லை. அவர்கள் தம் சொந்த மொழியில் ஆட்சி நிறுவனங்களுடனும் அலுவலர்களுடனும் தொடர்பு கொண்டு தம் கருமங்களை ஆற்றலாம்.

ஆனால், இலங்கையில் எவ்விடத்திலே என்றாலும் சிங்களம் தெரியாத மக்களுக்கு உத்தியோக மொழி, நீதிமன்ற மொழி, தொடர்பாடல் மொழி என்ற முறையிலே பல சங்கடங்கள் உண்டு. தமிழர்களிற் பெரும்பாலானவர்களைப் பொறுத்தவரை சிங்களம் தெரிந்தால் சிங்களம், இல்லையானால் ஆங்கிலம் மூலமே அலுவல் பார்க்க வேண்டியுள்ளது. இந்த நிர்ப்பந்தம் இருப்பதனால் தமிழிலே கருமமாற்றும் விருப்பமும் பற்றும் இருக்கும் மக்கள் கூட அவ்வாறு செய்வது சுணக்கத்துக்கு ஏதுவாகும் என்ற பட்டறிவினால், தமிழ்ப்பயன்பாட்டைக் கைசோரவிட வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள்.

அத்துடன் அரசு அலுவலர்களும் தமிழ்ப்பயன்பாட்டை விருப்புடன் மேற்கொள்வதாக இல்லை. சிங்களத் தேர்ச்சி குறைந்த தமிழ் அலுவலர்கள் கூட, ஆங்கிலமூலம் ஆலுவல் பார்ப்பதை விரும்புவரே தவிர, தமிழ்ப்பயன்பாட்டை ஊக்கும் போக்கைத் தவிர்த்துக் கொள்வதை நாம் அவதானிக்கலாம்.

இவ்வாறு இருப்பதனால், தமிழ்ப் பாடசாலைகளிலே தமிழ் மொழி மூலம் கல்வி கற்று, பல்கலைக் கழகத்திலும் தமிழ் மூலம் தம் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் பட்டதாரிகள் கூட எதிர் நோக்கும் தொல்லைகள் எண்ணிலடங்கா. இளைஞர் ஒருவர் ஒரு வேலைக்கு விண்ணப்பிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். இவர் தமிழ் மொழி மூலம் கல்வி கற்றிருந்தாலும் விண்ணப்பப் படிவத்தைத் தமிழில் நிரப்பியிருந்தாலும், நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அழைக்கும் கடிதம் இவருக்கு முழுச் சிங்களத்திலே தான் வருகிறது. நேர்முகப் பரீட்சை எங்கே, எப்பொழுது, என்ன நேரம் நடைபெறும்? என்னென்ன ஆவணங்கள் கொண்டு போக வேண்டும்? இந்த விவரங்கள் எல்லாம் இவர் அறியாத அந்த 'ஆட்சி மொழியிலே' தான் இருக்கின்றன. அது மட்டுமா? நேர்முகப் பரீட்சை என்ன மொழியிலே நடைபெறுமோ என்று அங்கலாய்க்க வேண்டிய நிலையிலே தான் இவர் இருக்கிறார். அடியும் தெரியவில்லை, நுனியும் புரியவில்லை, தலையும் தெரியவில்லை, காலும் புரியவில்லை.

பட்டதாரி விண்ணப்பகாரருக்கே இந்தக் கதி என்றால், ஓ.எல்., ஏ.எல்.காரர்களில் தவிப்பையும் திண்டாட்டத்தையும் சொல்ல வேண்டுமா?

சரி.போகட்டும். உத்தியோகம் தேடும் விண்ணப்ப காரர்களை விட்டு விடுவோம். உத்தியோக நாட்டத்தினாலே அரைகுறைச் சிங்களமாவது அவர்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். அந்த அரை குறை அறிவை வைத்துக் கொண்ட ஒரு படியாகத் தட்டித் தடக்கிச் சமாளிக்கத் தெண்டிக்கலாம். ஆனபடியால் ஒரு பேச்சுக்கு அவர்களை விட்டு விடுவோம். குடா நாட்டிலே உள்ள ஒரு குடியிருப்பாளருக்கு வருவோம். அல்லது மலையகத்து மனிதர் ஒருவரை எடுத்துக் கொள்ளுவோம். இவர்கள் நிரப்ப வேண்டிய படிவங்கள் கூடத் தமிழில் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் ஏதும் இல்லை. குடா நாட்டில் இப்போது வீடு தோறும் தொங்கவிடப்பட்டுள்ள வதிவாளர் அட்டவணைகள் எல்லாம் சர்வசம்பூரணமாகச் சிங்கள மொழியிலே தான் உள்ளன. தம் வீட்டுச் சுவரில் ஒட்டிவிடப்பட்டுள்ள இந்த ஆவணத்தின் உள்ளடக்கம் என்ன என்பது வீட்டுக்காரருக்கே சரி செப்பமாகத் தெரியாது. இது பற்றி யாருக்காவது விளக்கமளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டால். இவர் 'தறப்புற' என்று முழிசுவதைத் தவிர, (அதைவிட அதிகமாக) வேறு எதுவும் செய்துவிட முடியாது. இப்பொழுது குடா நாட்டிற் சில பகுதிகளில் மின்சக்தி வழங்குவதற்கான முயற்சிகளை இலங்கை மின்சார சபை செய்து வருகிறது. மின்னிணைப்புப் பெற விரும்புகிறவர்கள் நிரப்பிக் கையளிக்க வேண்டிய படிவத்திலே கூடத் தமிழ் இல்லை. இது இன்றைய பத்திரிகை செய்தி.

உண்மை என்னவென்றால், தமிழும் ஆட்சி மொழி என்று சட்டப்புத்தகம் சொன்னாலும், அந்தச் சட்டத்தைச் செயற்படுத்துகிற பொறுப்புநிலையில் உள்ள பலருக்கு அதில் அக்கறை இல்லை, விருப்பம் இல்லை. ஆகையினாலே, அவர்கள் தமிழ் தக்க அளவுக்கு விருத்தி செய்யாமலே காலந்தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். பன்மொழி அறிவை ஊக்குவதற்கென்று கொடுக்கப்படும் படிகளையோ அலவன்சுகளையோ பெறும் பொருட்டு அதற்கு வேண்டிய குறைந்த பட்ச அறிவைப் பெற்றிருப்பதாகக் காட்டி அந்த அலவன்சுகளைப் பெற்றுக் கொண்டாலும், திருப்திகரமாக அலுவலக வேலைகளைக் கொண்டு நடத்தக் கூடிய 'மொழித் தேர்ச்சி அவர்களிடம் இல்லை. தேர்ச்சி போதாமையால் ஏற்படும் சிரமங்களும் கொஞ்ச நஞ்சமல்ல.

ஒரு சின்ன எடுத்தக்காட்டு இந்திய அமைதிப்படையின் வருகைக்கு முற்பட்ட ஒரு சம்பவம் மலையகத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்து ஒரு மாணவர் படித்துக் கொண்டிருக்கிறார். இவர் திடீர் என்று காணாமற் போய் விடுகிறார். பல்வேறு மட்டங்களிலும் இவரைத் தேடி மீட்க முயற்சிகள் நடைபெறுகின்றன. கடைசியில் இவர் தெற்கில் உள்ள சிறைக்கூட மொன்றில் உள்ளதாக அவரே எழுதிய கடிதம் வருகிறது. அவர் காணாமற் போனதற்கும் கண்டுபிடிக்கப்பட்டதற்குமிடையிலே சில ஆண்டுகளே சென்று விட்டன. பெருந்தொகையான விசாரிப்புக்களுக்கும், கடிதப் போக்குவரத்துக்கும், தொலைபேசித் தொடர்பாடலுக்கும் பிறகுதான் அவரைத் தேடியறிய முடிந்தது. சம்பந்தப்பட்டவர்களின் மொழியறியாமை தான் இவ்வளவு தாமதத்துக்கும் காரணம் என்று தெரிய வந்தது. 'சோமு தியாகராசா' என்பது போன்ற ஒரு பெயரைச் சிங்களத்தில் எழுதி, பிறகு அதையே ஆங்கிலத்தில் எழுதி, மறுபடியும் தமிழிலே எழுதி வாசித்துப் பேச, அந்தப் பெயர் 'செம்பு நாகராஜா' என்பதுபோன்ற வடிவத்தைப் பெற்று விட்டது.

அண்மையிலே கூட, வீமன்காமம், 'வியமன்காமம்' என்றும் உசன், 'உஷன்' ஆகவும் மருவுகின்ற அற்புதங்கள் சற்று அடிக்கடி நிகழத் தொடங்கியுள்ளன.

இந்த அற்புதங்களுக்கிடையிலே, ஆட்சி மொழி பற்றிய அடிப்படையான 'பச்சை' உண்மை என்ன வென்றால், தமிழ் மக்களை இலங்கையர்கள் என்று பெரும்பான்மை இனத்தவர்கள் பலர் மனமார ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை இன்னும் அடையவில்லை. வேற்று நாட்டார் ஆட்சி நீங்கி அரை நூற்றாண்டு கழித்து விட்ட இந்தக் காலகட்டத்திலே கூட, "வந்தேறு குடிகள் யார்? முந்தேறு குடிகள் யார்?" என்று ஆராய்வதிலே தான் பலரும் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். ஆவல் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு மட்டங்களிலும் 'வெறும் பந்தயங்கள்', அறைகூவல்கள், சவால்கள், மட்டந் தட்டல்கள், குட்டி முந்தல்கள் என்ற போக்கிலே அரசியல் விளையாட்டில் ஈடுபடுவது தான் இன்றைய தேசீய பராக்கும் பொழுது போக்குமாயுள்ளது.

இன்று இந்த நாட்டில் நடைபெறும் முடிவற்ற மோதல்களுக்கு முதலேதுவாக உள்ள பிரச்சினைக்குப் பல பரிமாணங்கள் உண்டு ஆயினும் இதன் தொடக்கப் புள்ளி மொழி மதம் ஆகிய இரண்டின் அடியாகவும் மூட்டப்பட்ட வெறுப்புக் கனலே ஆகும். மொழி–மத மேன்மைவாதம் கிளப்பி விட்ட ஆட்டமும் ஆவேசமும் இன்னும் தணிந்தபாடில்லை. அது தணிவதற்குச் சிறுபான்மைச் சமூகத்தவர்களின் உரிமை வேட்கையின் அடியாக எழுந்த கோரிக்கைகள் திருப்திகரமாக நிறைவேற்றப்பட வேண்டும். அவை நிறைவேற்றப் படுவதற்கு நிதான புத்தியின் பாற்பட்ட கருத்துப் பரிமாற்றம் முதன்மையான முன் தேவை ஆகும். அவ்வாறான உரையாடல்களின் வழியிலே நல்ல தீர்வுகள் ஏற்படும் போது, ஆட்சி மொழி பற்றிய சிரமங்களும் சிக்கல்களும் தாமாகவே வாடிச் செத்து உதிர்ந்து போகும்.

அப்பொழுது தான், இங்குள்ள அனைத்துத் தரப்பினரும் உரிமைப் பெருவாழ்வையும் அமைதியையும் பெறுதல் கூடும்.

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

# கம்யூனிஸ்டுகள்

## தோழர் மா ஓ

கம்யூனிஸ்டு ஒருவர் விசால உள்ளம் படைத்தவராக இருக்க வேண்டும். அவர் நேர்மையும் ஊக்கமும் உடையவராக இருக்க வேண்டும். புரட்சியின் நலன்களைத் தனது சொந்த உயிர் போல் கருத வேண்டும். தனது சொந்த நலன்களைப் புரட்சியின் நலன்களுக்கு கீழ்ப் படுத்த வேண்டும். எங்கும் எப்பொழுதும் அவர் சரியான கோட்பாட்டின் வழி ஒழுகி, தவறான கருத்துக்கள், செயல்கள் எல்லாவற்றுக்கும் எதிராகச் சளையாத போரட்டம் நடத்த வேண்டம். இவ்வாறு, கட்சியின் கூட்டு வாழ்வை ஸ்திரப் படுத்தி, கட்சிக்கும் பொதுமக்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைப் பலப்படுத்த வேண்டும். அவர் எந்த ஒர் தனிநபரிலும் பார்க்க கட்சியிலும் மக்களிலும் கூடுதலான அக்கறையும், தன்னை விடப் பிறர் மீது கூடுதலான அக்கறையும் செலுத்த வேண்டும். இப்படிச் செய்தால் தான் அவரை ஒரு கம்யூனிஸ்டு என்று கருத முடியும்.

**"தாராளவாதத்தை எதிர்ப்போம்"**
**(7. செப்டம்பர். 1937)**

ஒரு கம்யூனிஸ்டின் சொற்களையும், செயல்களையும் உரைத்துப் பார்க்கும் அதி உயர்ந்த முறை யாதெனில், அவை ஏகப் பெரும்பான்மையான மக்களின் அதி உயர்ந்த நலன்களுக்கு இசைவாக இருக்கின்றனவா, இல்லையா, அவர்களுடைய ஆதரவைப் பெறுகின்றனவா இல்லையா என்று பார்ப்பதாகும். அதை நமது தோழர்கள் எல்லாரும் உணரும்படி செய்ய வேண்டும்.

**"கூட்டரசாங்கம் பற்றி"**
**(24. ஏப்ரல். 1945.)**

எந்தக் காலத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு கம்யூனிஸ்டு தனது சொந்த நலன்களை முதலிடத்தில் வைக்கக் கூடாது. அவர் அவற்றைத் தேசத்தின் நலன்களுக்கும், மக்களின் நலன்களுக்கும் கீழ்ப்பட்டதாக்க வேண்டும். எனவே, சுயநலம், வேலையில் அசிரத்தை, ஊழல், புகழ் நாட்டம் முதலியவை எல்லாம் மிக இகழத் தக்கவை. ஆனால், சுய–நலமின்மை, தனது முழு சக்தியையும் கொண்டு வேலை செய்வது, பொது கடமைக்குப் பூரண விசுவாசம், அமைதியான கடின உழைப்பு முதலியவை மதிப்புக்குரியவையாகும்.

**"தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்"**
**(அக்டோபர். 1938.)**

கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் உண்மைக்காக வாதாடத் தயாராய் இருக்க வேண்டும். காரணம், உண்மை என்பது மக்களின் நலன்களுக்குச் சாதகமானது. கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் தமது தவறுகளைத் திருத்தத் தயாராய் இருக்க வேண்டும் காரணம், தவறுகள் மக்களின் நலன்களுக்குப் பாதகமானவை.

**"கூட்டரசாங்கம் பற்றி"**
**(24. ஏப்ரல். 1945.)**

கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் விஷயம் ஒவ்வொன்றையும் ஏன் எப்படி என்று ஆராய வேண்டும். தமது தலைகளைப் பாவித்து, அது யதார்த்தத்துக்குப் பொருந்தியதா, இல்லையா, உண்மையில் அது நல்ல ஆதாரமுடையதா, இல்லையா என்று கவனமாகச் சிந்திக்க வேண்டும். எவ்விதத்திலும் ஒன்றைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி, அடிமைத் தனத்தை வளர்க்கக் கூடாது.

**"கட்சி நடையைச் சீர்செய்வோம்"**
**(1. பெப்ரவரி. 1942.)**

முழுமையின் நலன்களைக் கணக்கில் எடுக்க வேண்டும், ஒவ்வொரு கட்சி உறுப்பினரும், ஒவ்வொரு வேலைத் துறையும், ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு செயலும், முழுக் கட்சியினதும் நலன்களிலிருந்து தொடங்க வேண்டும். இந்தக் கோட்பாட்டை அத்து மீறுவது முற்றிலும் அனுமதிக்க கூடாது.

**"கட்சி நடையைச் சீர்செய்வோம்"**
**(1. பெப்ரவரி. 1942)**

கம்யூனிஸ்டுகள் நடைமுறை சாத்தியப்பாடு, தூரதிருஷ்டி இரண்டிலும் ஒரு ஆதர்சத்தைச் சிருஷ்டிக்க வேண்டும். நடைமுறை சாத்தியமாயிருப்பதன் மூலம் தான், நியமிக்கப்பட்ட கடமைகளை அவர்களால் நிறைவேற்ற முடியும். தூரதிருஷ்டி மாத்திரம் முன்னேற்றப் போக்கில் அவர்கள் நிலை கலங்காத படி தடுக்க முடியும்.

**"தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்"**
**(அக்டோபர். 1938.)**

கம்யூனிஸ்டுகள் மிகத் தூரதிருஷ்டியுடையவர்களாகவும், மிகுதியும் சுய–பரித்தியாக உணர்வு உடையவர்களாகவும் மிக உறுதியானவர்களாகவும், நிலைமைகளைக் கணிப்பதில் பட்சபாதமில்லாதவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் பெரும்பான்மை மக்களைச் சார்ந்து, அவர்களுடைய ஆதரவை வென்றெடுக்க வேண்டும்,

**"ய்ப்பானிய- எதிர்ப்பு யுத்த காலத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கடமை"**
**(3. மே. 1937.)**

கம்யூனிஸ்டுகள் படிப்பில் ஒரு ஆதர்சமாயிருக்க வேண்டும். அவர்கள் எப்பொழுதும் மக்களின் ஆசிரியர்களாக விளங்கும் அதே வேளையில் அவர்களுடைய மாணவர்களாகவும் இருக்க வேண்டும்.

**"தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்"**
**(அக்டோபர். 1938)**

வெகுஜன இயக்கங்களில் வேலை செய்யும் ஒவ்வொரு கம்யூனிஸ்டும், மக்களின் நண்பனாய் விளங்க வேண்டுமேயன்றி அவர்களின் எஜமானாக அல்ல. சளையாத ஆசிரியனாய் விளங்க வேண்டுமே தவிர, ஒரு அதிகார வர்க்க அரசியல்வாதியாக அல்ல.

**"தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்"**
**(அக்டோபர். 1938)**

நன்றி - நூலகத்திட்டம்



# சர்வதேச அரங்கில்

## சர்வாதிகாரக் கொலைஞனும் சட்ட நுணுக்கங்களும்

சிலே நாட்டில் சர்வாதிகாரியான அகொஸ்தினோ பினோஷேயின் ராணுவப் புரட்சியை ஒட்டி அந்த நாட்டின் முதலாவது இடதுசாரி சனாதிபதியான ஸல்வ்டோர் அயென்டே 1974ல் படுகொலை செய்யப் பட்டார். அடுத்து வந்த ஆண்டுகளில் இந்த ராணுவச் சதிக்கு உடந்தையாக இருந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அதன் கொலைக் கருவியான .சி.ஐ.ஏயுடைய அனுசரணையுடனும் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டார்கள். ஆயிரக் கணக்கானோர் காணாமற் போனார்கள். இந்தத் தசாப்தத்தின் முற்பகுதியில் சிலேயின் வெகுசன இயக்கத்தின் வளர்ச்சியின் விளைவாக பினோஷே தூக்கி எறியப் படுமுன் அரச அதிகாரத்திலிருந்து விலகினாலும் ராணுவத்தின் அதிபதியாகவே நீடிக்க முடிந்தது. சென்ற ஆண்ட ராணுவத்திலிருந்து பதவி விலகு முன்பு தனக்குப் பாராளுமன்றத்தின் மூதவையில் பதவி வழங்க ஏற்பாடும் செய்து பதவியிலிருந்து விலகினார்.

சிலேயின் ஆட்சி மாற்றம் நாட்டு மக்களுக்கு எதிராக ராணுவம் செய்த கொடுமைகட்காக எவரையும் தண்டிக்க இடமளிக்கப்படாது என்ற உத்தரவாதத்துடனேயே நிகழ்ந்தது. எனவே கொலைகாரர்கள் தமது உயிருக்கு அஞ்சாமலே உலாவ முடிந்தது. 80வயதுக்கும் மேற்பட்ட பினோஷே லண்டனுக்கு மருத்துவ சிகிச்சைக்காக வந்த போது, அவரது ஆட்சியின் கீழ்க் கொல்லப்பட்ட ஸ்பானிய குடிமக்கள் பற்றி விசாரிப்பதற்காக அவரைக் கைது செய்யுமாறு ஸ்பானிய சட்டமா அதிபர் ஆணை பிறப்பித்ததன் பேரில் அவர் கைது செய்யப்பட்டு இப்போது பிணையில் விட ஏற்பாடு செய்யப்பட்டது. பினோஷே முன்னாள் அரசாங்கத் தலைவர் என்பதாலும் அவர் ராஜ தந்திரிகட்கான கடவைச் சீட்டில் பயணம் செய்ததாலும் அவரைக் கைது செய்தது சட்ட விரோதமென வாதிக்கப்படுகிறது. ஸ்பானிய ஆட்சியாளர்களும் இவ்விடயத்தில் தடுமாற்றம் காண்பிக்கிறார்கள். அதை விட முக்கியமாக, சிலேயின் 'முற்போக்கு' ஆட்சியாளர்கள் பினோஷே கை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இருக்கின்றனர். இது நாட்டின் இடதுசாரிகளைப் பிளவுபடுத்தும் என்று அஞ்சப் படுகிறது. இடதுசாரிகள் இப் பிரச்சனையில் பிளவுபட்டால், பினோஷே ஸ்பெயினில் மறியலில் வைக்கப்படும் சூழ்நிலையில் அவரை ஒரு தியாகி ஆக்கி வலதுசாரிகள் பதவிக்கு வரலாம் என்ற ஒரு நியாயமான அச்சமும் உள்ளது.

எப்போதோ சிலேயில் மரண தண்டனை விதித்திருக்கப்பட வேண்டிய பினோஷேவைத் தண்டிக்கும் உரிமை அந்த நாட்டு மக்களுக்கு இல்லாத நிலையில் பினோஷேயின் கைது தொடர்பான இந்த நாடகம் கேலிக்கூத்தாகவே முடிந்தாலும், அந்தநாட்டு மக்களுக்கு எதுவிதமான வித்தியாசமும் இல்லை.

பினோஷே கைது பற்றிப் பேசப்படுகிற சட்ட நுணுக்கங்கள் எல்லாம் அந்நிய ஆதிக்கத்திற்கெதிரான இரண்டு போர்களில் காம்போஜ மக்களுக்குத் தலைமை தாங்கிய பொல்பொட்டைக் கைது செய்ய வேண்டும் என்று அமெரிக்கா பிடிவாதமாக நின்றபோது ஏன் எழவில்லை?

சர்வாதிகாரக் கொலைஞன் பினோஷே அமெரிக்காவின் எடுபிடி ஃ பாஸிஸத்தின் நண்பன். எனவே பினோஷேயின் உரிமைகள் புனிதமானவை. இது தான் ஏகாதிபத்தியத்தின் சட்ட நுணுக்கங்களின் சாராம்சம். ●

## மஹத்திர் ஒரு சர்வாதிகாரியாம் அமெரிக்கா கண்டுபிடிப்பு!

மலேசியாவின் பொருளாதாரச் சரிவைத் தடுத்து நிறுத்துவதற்கு அதன் பிரதமர் மஹத்திர் முகம்மது எடுக்கும் நடவடிக்கைகள் அந்நியப் பெருமுதலாளிகளும் உலக வங்கியும் சர்வதேச நாணயநிதியதம் கூறுவதற்கு எதிரான திசையில் அமைந்துள்ளன. இந்த விதமான மனிதாபிமானமற்ற நடவடிக்கையை மேலை நாடுகளின் மனிதாபிமான ஏடுகளால் மன்னிக்க முடியவில்லை. எனவே அவரது பழைய பிழைகளும் கடுமையான கண்டனத்துக்கு ஆளாகியுள்ளன.

உதவிப் பிரதமராக இருந்த அன்வர் இப்ராஹிமைப் பதவி நீக்கியதோடு அவர் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களையும் மலேசிய ஆட்சியாளர்கள் சுமத்தியுள்ளனர். அரசியல் எதிரிகட்கு மலேசியாவில் இப்படி நடப்பது இதுதான் முதல் தடவையல்ல. அது மட்டுமின்றி அன்வரும் அந்த விதமான அடக்கு முறையில் ஒரு முக்கிய பங்காளியாக மஹித்திருடன் ஒத்துழைத்தவரே. மஹித்திருக்கு எதிராக அன்வர் அதிகாரத்துக்கு வருவதை மேலை நாடுகள் விரும்ப ஒரே காரணம் அன்வர் சர்வதேச நாணயநிதியின் ஆலோசனைகளை ஏற்று கட்டுப்பாடற்ற அந்நிய மூலதன ஊடுருவலை ஆதரிப்பார் என்ற நம்பிக்கையே யாகும். மலோசியாவில் 1972ல் ஏற்பட்ட மாணவர் எழுச்சி கடுமையாக ஒடுக்கப்பட்ட போது அதில் மாணவர்களால் மிகவும் வெறுக்கப்பட்டவர் அன்வர். இன்று மலேசியாவில் மஹித்திருக்கு எதிரான எழுச்சி ஒரு பாரிய சமுதாய மாற்றத்துக்கு வழி வகுப்பதை ஏகாதிபத்தியம் விரும்பாது. எனவே மஹத்திரின் இடத்தை அன்வர் அல்லது தங்களுக்கு உடன்பாடான யாராவது பிடிக்க வேண்டுமென்பதே ஏகாதிபத்தியத்தின் அக்கறை. எசமானர் எவ்வழி பத்திரிகைச் சதந்திரம் அவ் வழி.

## இந்தோனீசிய எழுச்சி வலுக்கிறது

சுகர்த்தோவைப் பதிவியிலிருந்து விலக்கிய ராணுவ அதிகாரிகளும் அவரது இடத்தில் பதவியில் அமர்ந்துள்ள ஹபீபியும் நாட்டை மக்களுக்கு நன்மைதரக்கூடிய சனநாயகப் பாதையில் நடத்துகிற எண்ணம் கொண்டவர்கள் அல்ல என்பது அன்றே நாம் அறிந்த விடயம்.

திரும்பவும் அதே ஆளும் வர்க்கமும் அதன் அந்நிய எசமானர்களுமே அதிகாரத்தில் தொடர்வதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு தான் அது என்று சுகர்த்தோவுக்கு எதிராகக் கிளர்த தெழுந்த சக்திகள் நன்கு அறிவார்கள். எனவே கிளர்ச்சி தொடர்கிறது.

பாராளுமன்றத்தைக் கூட்டி அங்கு ஜனநாயக நாடகமாடி ஆட்சி அதிகாத்தைப் பலப்படுத்துகிற முயற்சியை எதிர்த்து இளைஞர்கள் நடத்திய போராட்டத்தில் 14பேர் ராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். இக் கொலைகட்குக் காரணமானவர் இந்தோனீசியாவில் சுகார்த்தோவைப் பதவி நீக்க உதவிய 'ஜனநாயக சார்பான' ராணுவத் தளபதி விரான்டோ ஆவார். ராணுவ அடக்குமுறையின் மூலம் இவரது வேடம் கலைந்து விட்டது. எதிர்ப்பு இயக்கம் இன்னமும் உறுதியுடன் தொடர்கிறது.

இதே காலகட்டத்தில் கிழக்கு ஜாவாவின் கிராமங்களில் மர்மக் கொலைகள் பல நடந்தன. பல முஸ்லிம் மதகுருமார் உட்பட்ட பிரமுகர்களும் பிறரும் கொல்லப்பட்டனர். விளக்க முடியாத இக் கொலைகளுக்குச் சூனியக் காரர்களே காரணம் என்றும் கம்யூஸ்ட்டுகள் அதன் பின்னணியில் இருந்ததாகவும் அரசாங்க நிறுவனத்தாரால் கூறப்பட்டது. நிஞ்ஜா என்ற அழைக்கப்பட்ட சூனியக்காரர்களைத் தேடும் முயற்சி கிராமங்களில் வன்முறைக்கு வித்திட்டது. முடிவில், இக் கொலைகளின் பின்னணியில் இருந்தது ராணுவமே என்ற உண்மை வெளியாகி விட்டது.

ஒன்று மட்டும் உறுதி. இந்தோனீசிய எழுச்சி இப்போதைக்கு ஓயாது. ஏனெனில் நாடு முழுவதும் மக்கள் எழுச்சி வலுத்து வருவதாகவே தினமும் செய்திகள் வருகின்றன.

**தோழர் மணி..** 7ம் பக்க தோடர்ச்சி

போட்டு வளர்ந்து செல்கிறது. இத்தகைய ஒட்டு மொத்த கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றுக்கு உலகின் ஒவ்வொரு நாடுகளிலும் பலம் சேர்த்து உருக்கேற்றி வழி காட்டிச் சென்ற கம்யூனிஸ்டுக்கள் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். அத்தகையவரில் ஒருவரே தோழர் மணியம் எனத் தோழமையுடனும் வாஞ்சையுடனும் அழைக்கப் பட்டவருமான தோழர் கே.ஏ.சுப்பிரமணியம். அவரது ஒன்பதாவது ஆண்டு மறைவுதினம் 1998 நவம்பர் 27ம் திகதியாகும். புதிய ஜனநாயக கட்சியின் (முன்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) உருவாக்க முன்னோடியும் வழிகாட்டியும் பொதுச் செயலாளருமாக இருந்து புரட்சிகர செயலாற்றி மறைந்த தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் நினைவைப் புதியபூமி நினைவு கூர்கின்றது.

# செய்தி சிறிது விடயம் பெரிது

### நொபெல் பரிசும் சமாதானமும்

நொபெல் பரிசுக்குப் பணத்தை வழங்கிய அல்பிரெட் நொபெல் யுத்தத்திற்கான வெடி உபகரணங்கள் விற்றே செல்வம் சேர்த்தவர். இந்தியாவில் பீரங்கி விற்பனை ஊழலில் சம்பந்தப்பட்ட போஃபர்ஸ் நிறுவனம் அவரது கம்பனிதான். நொபெல் இன்று இல்லை. மனசாட்சி அழுத்தியதால் சமாதானத்துக்காக ஒரு பரிசை ஏற்படுத்தினார் என்று சொல்லப்படுகிறது. ஆயினும் நொபெல் நிறுவனம் தனது பணத்திற் கணிசமான பகுதிஸ்ய ஆயுத விற்பனையில் முதலிட்டுள்ளது. இந்தோனீசிய பர்மிய சர்வாதிகாரர்கட்கு ஆயுதம் வழங்கிவந்துள்ள கம்பனியிலும் அவர்கள் முதலிட்டுள்ளனர். இது தான் அவர்களது சமாதான வேட்கையின் இலட்சணம்.

இடையில் ஒரு தடவை மக்களுக்காகக் குரல் கொடுக்கும் ஒருவருக்குப் பரிசு வழங்குவதன் மூலம் ஏகாதிபத்திய நலன் சார்ந்த முறையில் வழங்கும் பிற பரிசுகட்கு மரியாதை தேடுகிற நொபெல் நிறுவனம் பற்றிய மயக்கங்களைக் கலைக்க மேற்கூறிய தகவல் உதவுமா?

### அமெரிக்காவா? வேண்டவே வேண்டாம்!

இரண்டாம் உலகப் போரின் பின்பு அமெரிக்க ஏகாதிபத்தியம் கனடாவை ஒட்டியுள்ள அலஸ்காவையும் பசிபிக் மாகடலில் உள்ள தீவுக் கூட்டமான ஹவாயையும் தனது 49ம், 50ம் அரசுகளாக்கியது. நெடுங்காலமாக அமெரிக்க ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ளதும் அமெரிக்காவின் அயலில் அத்திலாந்திக் சமுத்திரத்தில் உள்ளதுமான புவெர்ட்டோ ரீக்கோவை அமெரிக்காவின் 51ம் அரசாக்க இணைப்பதற்கான வாக்கெடுப்பு டிசம்பர் 1998ல் நடத்தப்பட்டுத் தோல்வி கண்டது. புவெர்ட்டோ ரீக்கோ அரசு இந்த இணைவை விரும்பிய போதும் மக்கள் தீர்மானமாக அதை நிராகரித்துள்ளனர்.

அமெரிக்கா எப்போது தங்களைத் தமதாக்கிக் கொள்ளும் என்று கனவு காணுகிற நமது அமெரிக்க தாசகர்களுக்கு இத்தகவல் சமர்ப்பணம்.

### ஜப்பானிய ஏகாதிபத்தியத் திமிர்

இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியரின் கையில் அதிக இழப்பைச் சந்தித்த நாடுகளின் வரிசையில் முதலில் சீனாவும் பின்பு கொரியாவும் வியற்நாமும் வரும் எனலாம். ஜப்பானியப் படையினர் சீன மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட பயங்கரமான கொடுமைகட்கும் செய்த கொலைகட்கும் அழிவுச் செயல்கட்கும் ஜப்பான் இன்று வரை மன்னிப்புக் கேட்கவில்லை. சீன, ஜப்பான் உறவை மிகவும் பாதிக்கும் இந்த விவகாரம் தொடர்பாகச் சீனா மிகவும் பொறுமை காட்டி வந்துள்ளது. அண்மையில் மக்கள் சீனக் குடியரசின் தலைவர் ஜியாங் ஜப்பான் சென்ற போது ஜப்பான் சீனாவுக்கு உடன்பாடான முறையில் ஒரு மன்னிப்புக் கோரலைச் செய்யுமென எதிர்பார்க்கப் பட்டது. ஆயினும் அது நடக்கவில்லை.

இது பற்றிக் கருத்துக் கூறிய பல தமிழ் ஏடுகள் இதை வெறும் கௌரவப் பிரச்சனையாயும் சீனா ஜப்பான் போட்டியாகவுமே நோக்கியுள்ளன. பிரிட்டிஷ் யுத்தக் கைதிகள் விஷயமாக ஜப்பான் தயங்கித் தயங்கித் வருத்தம் தெரிவித்தது. ஜப்பானிய அதிகாரவர்க்கத்தின் திமிரும் ஆக்கிரமிப்பு மனோபாவமும் இன்னும் மாறவில்லை என்பதைக் காட்டும் முறையிலேயே ஜப்பானிய ஆட்சி மன்னிப்புக் கேட்க மறுத்து வருகிறது.

இவ்விடயம் நியாயம் சார்ந்த ஒரு பிரச்சினை. இந்திய ஆக்கிரமிப்பை மூடிக்கட்டிச் சீனா மீது பகைமை காட்டும் சின்னத்தனம் நமது ஏடுகளில் உள்ள வரை நியாயத்தை அவர்கள் விளங்கிக் கொள்ள முடியுமா?

### இது பகிடி அல்ல

மனைவியை இழந்த தனது வயதான தந்தையாரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று இந்தோனீசியாவின் முன்னாள் சர்வாதிகாரி சுகார்த்தோவின் இளைய மகன் இந்தோனீசியக் கிளர்ச்சிக்காரர்களை வேண்டிக்கொண்டுள்ளார்.

சுகார்த்தோ களவாடிய பணத்தைத் திருப்பித் தருமாறு ஆர்ப்பாட்டம் செய்வதால் இந்தோனீசியாவுக்கு ஒரு நன்மையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகார்த்தோவால் சூறையாடப்பட்ட பணம் 40 பில்லியன்(4,000 கோடி) டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பாவம் ஏழைக் கிழவர்!

### மூச்சுத் திணறும் ஒரு சர்வாதிகாரி

பிரித்தானிய உயர் நீதிமன்றம் பினோஷேயை வழக்கு விசாரணைக்கு உட்படுத்துவதற்கு எதிராக பிரித்தானிய மேலவை (பிரபுக்கள் அவை) நியமித்த சட்டப் பிரபுக்கள் குழுவில் மூன்றுபேர் அவரை வழக்கு விசாரணைக்கு உட்படுத்த முடியும் எனவும் இருவர் மாறாகவும் கருத்துக் கூறியதால் பினோஷேயை ஸ்பெயினில் விசாரணைக்கு அனுப்ப இயலுமாகியுள்ளது. ஆயினும் இவ்விடத்தில் சிலே அரசாங்கத்தின் நெருக்குவாரத்திற்கு பிரித்தானிய ஆட்சியாளர்கள் பணிந்து போய் கொலைகாரன் பினோஷேயை சிலேக்கு மீண்டும் போக அனுமதிக்க இடமுண்டு. பினோஷேக்கு என்றாவது உரிய தண்டனை கிடைக்குமா என்பது ஐயமே. ஆயினும் இந்த வெற்றி ஒரு பினோஷே எதிர்ப்பாளர் கூறியது போல பிரித்தானிய நீதிக்கும் சிலேயினதும், லத்தின் அமெரிக்காவினதும் உலகினதும் மக்களுக்கும் கிடைத்த வெற்றியே.

இதே வேளை சிலேயின் மிதவாத-இடது கூட்டணி அரசில் இதன் விளைவாக விரிசல்கள் ஏற்படலாம். ஏற்கெனவே வலதுசாரிகள் பினோஷேக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து வன்முறையில் இறங்கிவிட்டனர். சிலே அரசாங்கம் யாரைத் திருப்தி செய்வது என்று முதலில் முடிவு செய்ய வேண்டும். பினோஷேயால் இவ்வளவு காலமாகத் தண்டனையில்லாமல் அதிகாரத்தைப் பகிர முடிந்தது மட்டுமின்றி அவரது கையாட்களான பிற கொலையாளிகளும் கொடுமைக்காரரும் எதுவிதமான விசாரணைக்கும் உட்படுத்தப்படவில்லை. சிலேயின் அடுத்த மக்கள் எழுச்சி இதை இயலுமானதாக்குமா?

நன்றி - நூலகத்திட்டம்



## 'வாழ்வுக்காக உயிர்த்தெழுவோம்'!
## இனவாதத்தை எதிர்த்த மக்கள் இயக்கம்

இரட்னபுரியில் சில தோட்டங்களில் தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட இனவன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கடந்த மாதம் இரட்னபுரி நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நகரமைதானத்தில் எதிர்ப்புக் கூட்டமொன்றும் நடைபெற்றது. 'வாழ்வுக்காக உயிர்த்தெழுவோம்' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட அந்நிகழ்ச்சியில் புதிய இடதுசாரி முன்னணியில் அங்கம் வகிக்கும் புதிய ஜனநாயக கட்சி, தேசிய ஜனநாயக இயக்கம், ஐக்கிய சோஷலிசக் கட்சி, நவசமசமாஜக் கட்சி. தீயேஸ அமைப்பு, கலாபே அபி, மக்கள் விவாத கேந்திரம் என்பனவும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவநானயக்காரவின் தலைமையிலான ஜனநாயக பொதுஜன இயக்கம், அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் இரட்னபுரி மனித உரிமைகள் அமைப்பு என்பனவும் கலந்து கொண்டன.

அவ்வன்முறைகளுக்கு பொறுப்பான வர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமெனவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் வற்புறுத்தி மேற்படி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இரட்னபுரி மாவட்டத்தில் இனவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தொடர்ச்சியாக பல நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக திட்டமிடப் பட்டுள்ளது. பல குழுக்கள் அமைக்கப்பட்டு பல்வேறு மட்டங்களிலும் வேலைகளை முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

அந்நிகழ்ச்சிகளில் மலையக தொழிற்சங்கங்கள் அக்கறைக் காட்டாதது மட்டுமின்றி இனவாதத்துக்கு எதிரான மேற்படி இயக்கத்தில் அவர்களின் தொழிற்சங்க அங்கத்துவம் கொண்டுள்ள தொழிலாளர்கள் இணைவதை தடுத்து நிறுத்தியுள்ளனர். தொழிலாளர்கள் வெளியே வந்து அரசியல் விடயங்களையும் உண்மை நிலைமைகளையும் அறிந்து புரிந்து கொள்ளக் கூடாது என்பதில் இத் தொழிற்சங்கத் தலைவர்கள் கவனமாக இருந்து வருவதையே இது காட்டுகிறது.

இரட்னபுரி வேவல்வத்தையிலும் ஏனைய தோட்டங்களிலும் நடைபெற்ற இனவன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் இன்னும் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. அதற்கான எந்த நடவடிக்கையும் அரசாங்கம் எடுத்ததாக தெரியவில்லை. ஆனால் பசறை தோட்டத் துரையின் பங்களாவும் லுனுகல பொலீஸ் ஜீப் எரிக்கப்பட்டதற்கும் எவ்வித நேரடியான சாட்சிகள் இல்லாத போதும் 28 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு இன்னும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட இரட்னபுரியில் நடைபெற்ற இனவன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரண நடவடிக்கைகள் வழங்கப்படவும் இல்லை. இன்னும் பல இடங்களில் தொழிலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். பதற்றம் நிலவுகின்ற அப்பகுதிகளில் மலையகத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை. வேவல்வத்தையில் தொழிலாளர்கள் தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டு வருவதால் அங்கு போடப்பட்டுள்ள தற்காலிக பொலீஸ் நிலையத்தை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கையும் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாத மலையகத் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு சென்று வாழ்வதற்கு வழிசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் அச்சுறுத்தப் படும் மக்களின் சார்பில் விடுக்கப் பட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தி செய்யும் சிங்களவர்களின் பிடியில் தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர்கள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே பெருமபாலான இனமுரண்பாடுகள் தோன்றுகின்றன. அந்த கசிப்பு உற்பத்தியாளர்கள் பேரினவாத அரசியல் வாதிகளுடன் மிகவும் நெருக்கமாக இருப்பதால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும் இல்லை.

எனவே இவ்வாறான நிலைமைகளை முகம்கொடுப்பதற்கு உறுதியான மக்கள் இயக்கமொன்று கட்டி வளர்க்கப்பட வேண்டும். அந்த வகையில் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள இனவாத எதிர்ப்பு இயக்கத்தில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் அணிதிரட்டப் படுவதனாலேயே இனவாதத்தை தோற்கடிக்க முடியும்.

## 'யாப்பா பட்டுன'விலிருந்து சில தகவல்கள்

☆ யாழ்ப்பாணத்தில் சில வீதித்தடை சோதனை முகாம்களில் இராணுவ வீராங்கனைகள் தமிழ் பெண்கள் சுகாதார துவாய்களை (கோட்டெக்ஸ்) அணிந்திருக்கின்றனரா என்ற சோதனையில் ஈடுபட்டிருக்கின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. பெண்களின் உடல்களை சோதிக்கும்போது உள்ளாடைக்குள் சுகாதார துவாய்களை அணிந்திருப்பதை கண்டால் அவற்றை கழற்றி எடுத்து இராணுவ வீரர்களிடம் காட்டி மகிழ்கிறார்களாம். பெண்களின் அந்தரங்கங்களை காற்றில் பறக்கவிடும் வெட்கங்கெட்ட சோதனைகள்.

☆ யாழ்ப்பாணத்திலிருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுக்கு தமிழ்மொழி தெரியாதாம். மனித உரிமைகள் மீறல்பற்றி முறைப்பாடுகள் கிடைத்ததும் அவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு தொலைபேசி மூலம் அறிவித்து மொழிபெயர்க்க உதவி கோருகிறார்களாம். இது திருடர்களிடம் நீதி கேட்பது போலல்லவா இருக்கிறது.

☆ செங்கல் ஒன்றையும் புத்தகமொன்றையும் சேகரித்து யாழ்ப்பாணத்தில் கட்டிய நூல் நிலையம் எதுவுமில்லை. யாழ்ப்பாணத்தில் கச்சேரியில் ஒரு அறையிலேயே யாழ்ப்பாண நூலகம் இயங்குகிறது. அதற்கு முன்பாக இராணுவ முகாம் இருக்கிறது. எனவே தமிழ் யுவதிகளுக்கும் இளைஞர்களுக்கும் அங்கு செல்வதற்கு அவசியமேற்படுவதில்லை இதைவிட சாவகச்சேரி நூலகமே இராணுவ முகாமாக இயங்குகிறது.

☆ யாழ்ப்பாண நகரில் 100இற்கு மேற்பட்ட மினிசினிமா தியேட்டர்கள் இருக்கின்றன. அவை இராணுவ, பொலிஸ் அனுசரணையுடன் நடத்தப்படுகின்றன. அவற்றில் நீலப்படங்களும் காட்டப்படுகின்றனவாம்.

☆ ரிவிரெச ராணுவ நடவடிக்கைக்கு பின்னர் கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாண பகுதியில் அழிக்கப்பட்ட பனைமரங்களின் எண்ணிக்கை இரண்டு லட்சமாகும் என கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

நன்றி. கித்துசர
டிசம்பர் 1998

## இலக்கியமும் திறனாய்வும் நூலிலிருந்து

சமுதாயங்களின் வரலாற்றை நாம் கூர்ந்து நோக்கும் பொழுது, ஒருண்மை புலப்படும். பல்வேறு காலப் பகுதிகளிலே–அடிப்படையான மாற்றங்களைக் கொண்ட யுகங்களிலே–அவ்வக் காலப் பகுதியின் இயல்புகளையும் தன்மைகளையும் திரட்டிக்கூறும் வகையில் சிலபல சொற்பிரயோகங்கள் அமைந்துவிடுகின்றன. உதாரணமாக, ஆண்டான்–அடிமை என்ற சொற்கள் இடைக்காலத்திலேயே தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக வழங்கியவை. அவை ஆள்வோனையும் அவன்கீழ் இருந்தவனையும் குறித்த அதேவேளையில், இறைவனுக்குப் பக்தனுக்கும் உள்ள தொடர்பையும் சித்தரிக்கிறதாயிருக்கிறது. நிலவுடமைச் சமுதாயத்தில் ஆளும் வர்க்கத்தினர் ஒருபுறமும், ஆளப்பட்டவர்கள்–அடிமை நிலையில் இருந்தவர்கள் மறுபுறமும் இருந்த பௌதிக நிலைமையின் தத்துவார்ந்த வெளிப்பாடாகவே இவ்வுறவுச் சொற்கள் அமைந்து விளங்கின என்பதில் எதுவித ஐயமுமில்லை. மேலேயிருந்தோர்–சுதந்திரர். கீழேயிருந்தோர்–அவருக்குக் கட்டுப்பட்டு அவரை நம்பியிருந்தோர்–பரதந்திரர். இந்நிலையில் சனநாயகத்துக்கு வாய்ப்பு இல்லை என்பதை விவரித்து விளக்கவேண்டியது அவசியமல்ல. அதாவது ஒவ்வொரு காலப் பகுதியிலும் சிற்சில சொற்கள் அடிப்படையான உயிர்க்கருத்துக்களைப் புலப்படுத்துவனவாயுள்ளன. உதாரணமாகக் கைத்தொழில் என்னும் சொற்றொடரை எடுத்துக்கொள்வோம். மேலெழுந்தவாரியாக நோக்கினால், மனிதன் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கிய காலமுதல் கைத்தொழில் சமுதாய இயக்கத்துக்கும் முன்னேற்றத்துக்கும் ஆதாரமான உற்பத்தி முறையாக இருந்து வந்துள்ளது. ஆனால் நவீன காலத்திலேயே கைத்தொழில் ஒரு சமதாயத்தின் அச்சாணியாக. அதன் பொருளாதார–சமூக அரசியல் வாழ்வினைப் பெருமளவுக்கு நிர்ணயிக்கும் சக்தி உடையதாக உருப்பெற்றுள்ளது. கைத்தொழில் நாடுகள்– Industrial Nations– என்று விதந்துரைக்கும் அளவுக்குக் கைத்தொழில், அந்நாடுகளின் முழுத்தன்மையை இனங்காட்டுவ தாய் அமைந்திருக்கிறது. இதுபோலச் சிற்சில சொற்கள் நவீன உலகில் பொருள் முக்கியத்துவம் வாய்ந்தனவாய் இருப்பதைக் கவனித்தல் தகும். மேற்கத்திய உலகின் நவீனகாலப் பகுதியை– விவரிக்கப் புகுந்த ரேமண்ட் வில்லியம்ஸ் என்ற ஆங்கிலத் திறனாய்வாளர், ஐந்து சொற்களைக் கொண்டு அவற்றின் பொருட்பரப்பு– குறிப்பு–என்பவற்றைக் கொண்டு – நவீன மேற்கத்திய கலாசார பரிணாமத்தை விளக்குகிறார். கைத்தொழில், சனநாயகம், வர்க்கம், கலை, கலாச்சாரம் என்பன அவ்வைந்து சொற்களுமாம்.



தற்காலத்தில் இவ்வைந்து சொற்களும் குறிக்கும் பொருள்கள் முந்திய பொருட் குறிப்புக்களிலிருந்து அதிகம் வேறுபடுகின்றன என்பது வெளிப்படை. உதாரணமாக நமது மொழியிலேயே இக்காலத்தில் வழங்கும் 'வர்க்கம்' எனும் பதத்தை ஒரு சிறிது நோக்குவோம். வர்க்கம் என்றால், ஒத்த பொருட்களின் கூட்டம், இனம், குறிப்பிட்ட எண்ணை அதே எண்ணாற் பெருக்கி வரும்தொகை, வமிசம், ஒழுங்கு, சதுரம் என்றொல்லாம் பொருள்படும். அதோடு வருக்ககனம், வருக்கத் தொகை, வருக்கமூலம், வருக்க எழுத்து, வருக்க மோனை முதலிய கலைச்சொல் வழக்குகளும் உண்டு. இப்பொருள்கள் இப்பொழுது ஆங்காங்கு வழங்குகின்றபோது, வர்க்கம் என்ற பதத்துக்கு ஆங்கிலத்திலே Class என்னும் சொல்லுக்குரிய பொருளே பெருவழக்காயுள்ளது. இதிற் சந்தேகமில்லை. வர்க்கம் என்ற சொல்லுக்குரிய மூலப்பொருள்களில் 'ஒத்த பொருள்களின் கூட்டம்' 'இனம்' என்பன இரண்டு. அவற்றினடியாகப் பொருள் விரிவாக்கம் பெற்று, இன்று வர்க்கம் என்பது சமூகப் பொருளில் சிறப்புப் பொருள் குறிப்பதாயுள்ளது. மத்தியதர வர்க்கம், பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவ வர்க்கம், நிலப்பிரபுத்துவ வர்க்கம், என்று குறிப்பிடுவதோடு வர்க்கச்சார்பு, வர்க்க போதம், வர்க்க உணர்வு, வர்க்கப் போராட்டம், வாக்கவேர்கள் என்றும் குறிப்பிடுகிறோம். இன்றைய சமுதாய அமைப்பையும் வர்க்கம் என்ற பதப்பிரயோகம் இன்றி விவரிப்பது, விளக்குவதும் அரிதாகவே இருக்கும். அதேவேளை யில் வர்க்கம் என்பது ஆய்வாளரின் சிந்தனை ரீதியான சொல்லாக மாத்திரமின்றிப் பல்லாயிரக்கணக்கான மக்களின் உணர்ச்சிப் பிரயோகமாகவும் இக்காலத்தில் இருக்கிறது சமுதாய மாற்றம், புரட்சி என்பன வர்க்கம் என்ற சொல்லுடன் தொடர்புடைய கருத் தோட்டங்கள். எனவே தான் ரேடன்ட் வில்லியம்ஸ் வர்க்கம் என்பது நவீன உலகின் விளக்கத்துக்கு இன்றியமையாத ஐந்து சொற்களில் ஒன்று என்றார். அவர் குறிப்பிடும் கைத்தொழில், சனநாயகம், வர்க்கம், கலை, கலாச்சாரம், என்பன புதிய சொற்கள் அல்ல. ஆனால் புதிய பொருட் பரிமாணங்களைப் பெற்றிருக்கும் சொற்கள்.

பேராசிரியர் க. கைலாசபதியின் 16வத மறைவு தினத்தை (6–12–98) நினைவு கூர்ந்து அவரது நூலிலிருந்து மேற்படி பகுதியினைப் பிரசுரம் செய்கிறோம். (ஆர்)

## பசறை போரா...
6ம் பக்க தொடர்ச்சி.

தொடங்கப்பட்டதாக பசறை தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் 17 தடவையும் பொதுசேவையாளர் தோட்ட ஊழியர் சங்கம் 12 தடவையும் குறிப்பிட்ட தோட்டத்துரையை பேச்சு வார்த்தைக்கு அழைத்திருந்தன. அவ்வழைப்புக்களை எற்று எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் அத்துரை கலந்துகொள்ளவில்லை. பதுளை தொழிற்சங்க திணைக்களத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தனக்கு சாதகமாக நடைபெறவில்லை என்று குற்றம் சாட்டிய துரையே கொழும்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை விடுத்திருந்தார்.

தோட்டத்துரையின் அசட்டை, ஏதேச்சாதிகாரம் என்பவற்றுக்கு மத்தியிலே தொழிற்சங்கத் தலைமைகள் முடிவு எடுக்கும்வரை பொறுத்திராமல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். முரண்பாடுகளுக்கு மத்தியிலும் இ.தொ.காவும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டது. எல்லா தொழிற்சங்கங்களும் கூட்டாக இயங்கின.

வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காக தொழிற் சங்கங்கள் கம்பெனியுடன் செய்து கொண்ட உடன்படிக்கை தொழிலாளர்களுக்கும் அவர்களது போராட்டத்துக்கும் ஏற்ற பலாபலன்களை கொடுக்கவில்லை என்றே தொழிலாளர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். அத்துடன் பங்களா எரிப்பு, பொலிஸ் வாகன எரிப்பு சம்பவத்துடன் தொடர்பு படுத்தி கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை பிணையில் எடுக்க முடியா திருப்பதும் தொழிலாளர் களுக்கு தொழிற் சங்கங்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. ▬

## தோழர் சாருமதி....
4ம் பக்க தொடர்ச்சி.

சற்று வெட்கப்பட வேண்டி இருந்தாலும் அது ஒழித்து மறைக்கப்படவேண்டிய ஒன்றல்ல என்றே கருதுகிறேன்.

சாருமதி (க. யோகநாதன்) இறுதிவரை ஒரு மார்க்சிசவாதியாக வாழ்ந்தவர். அந்த மகத்தான தத்துவத்தை அடித்தளமாகக் கொண்டு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய முயன்று வந்தார். அவர் கலை இலக்கியத்தின் ஊடாக செய்து வந்த வேலைகள் கனதியானவை. அவர் ஆரம்பத்தில் தோழர் கிருஷ்ணகுட்டியோடும் சுபத்திரனோடும் இணைந்து செயற்பட்ட நினைவுகள் என்றும் அழியாதன. தனது சொந்த முயற்சியில் 'வயல' சஞ்சிகையை வெளியிட்டுவந்தார். பின் 'பூவரசம்' என்னும் இலக்கிய அமைப்பின் முக்கிய பங்காளியாக இருந்து வந்தார். மறைந்த கவிஞர் சுபத்திரனின் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டு சுபத்திரனின் நினைவைப் பதித்துச் சென்றார். மாணவர்கள் மத்தியில் முற்போக்கு சிந்தனைகளைப் பரவச் செய்வதில் இரட்டைத் தனத்துடன் அவர் நடந்து கொள்ளவில்லை. சிறந்த கவிஞராக கட்டுரையாளராக விமர்சகராக விளங்கி வந்த சாருமதி மட்டக் களப்பில் சிகப்பு ஒளி சிறு அளவில் தானும் ஒளிர்வதற்கு ஒரு தோழராக இருந்தார் என்பதை மறுத்துவிட முடியாது. அவரது நினைவு எம் மத்தியில் என்றும் வாழும்.

-துரை-

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

PUTHIYA POOMI පුදියපූමි

சுற்று 06 ஜனவரி 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 25

| ஐ.தே.கட்சியின் 17 வருட ஆட்சியில் | | பொ.ஐ.முன்னணியின் 4 வருட ஆட்சியில் (1998 டிசம்பர் 5 வரை) | |
|---|---|---|---|
| கொல்லப்பட்ட படையினர் | – 3647 பேர் | கொல்லப்பட்ட படையினர் | – 8208 பேர் |
| காயப்பட்ட படையினர் | – 8635 பேர் | காயப்பட்ட படையினர் | – 17492 பேர் |
| காணாமல் போன படையினர் | – 1087 பேர் | காணாமல் போன படையினர் | – 1321 பேர் |
| கொல்லப்பட்ட "பயங்கரவாதிகள்" | – 6107 பேர் | கொல்லப்பட்ட "பயங்கரவாதிகள்" | – 9911 பேர் |

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலிருந்து.
இதில் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் பற்றிய விபரம் கூறப்படவில்லை

# பேரினவாதக் கட்சியின் கால்களைப் பிடித்து உரிமைகள் எதையும் பெறமுடியாது.

## புதிய இடதுசாரி முன்னணிக்கு வாக்களியுங்கள்

வடமேல் மாகாணசபை தேர்தலில் இ.தொ.கா தனியாக போட்டியிட எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை அரசாங்கத்துக்கு வாக்களிக்கும்படி இ.தொ.கா வடமேல் மாகாணசபையிலுள்ள மலையகத் தமிழ் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வேட்பாளர் பட்டியலில் ஒரு தமிழர்கூட இடம்பெறாதபோதும் அரசாங்கத்தை ஆதரித்து வேலை செய்ய இ.தொ.கா எம்.பிக்களை கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. வடமேல் மாகாணசபையிலுள்ள குருநாகல் புத்தளம் மாவட்டங்களிலுள்ள மலையகத் தமிழ் மக்கள் பற்றி மலையக மக்கள் முன்னணிக்கு எவ்வித அக்கறையும் இல்லாத போதும் இ.தொ.கா அரசாங்கத்தை ஆதரித்து வேலை செய்வதற்கு போட்டியாக வடமேல் மாகாண சபையில் அரசாங்கத்திற்கு ஆதரவாக வேலைகளை செய்யவிருக்கிறது. மலையக தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறப்படும் இந்த இரண்டு அமைப்புகளும் அரசாங்கத்திடமிருந்து மக்களுக்காக எதனையுமே பெறாவிட்டாலும் கூட அரசாங்கத்தை பலமாக்கி பாதுகாப்பதில் ஒன்றுக்கு ஒன்று குறைந்தல்ல.

அதிகாரத்தில் இருக்கும் பலமான கட்சிகளின் கால்களை கட்டிப்பிடித்துக் கொண்டு மலையக மக்களிடம் அரசியல் செய்ய முடியும் என்ற கையாலாகாத்தனத்துடன் இருக்கும் அமைப்புகளிடம் வேறு எதனையும் மலையக மக்கள் எதிர்பாக்க முடியாது. பொதுஜன ஐக்கிய முன்னணி கடந்த நான்கு வருட ஆட்சிக்காலத்தில் மலையக மக்களுக்கு செய்ததென்ன? தோட்டப்புற உள்ளகக்கட்டமைப்பு அமைச்சுக்கான நிதியை கூட ஒழுங்காக நிறைவேற்றித் தரமுடியாத அரசாங்கம் வேறு எதனைத்தான் செய்யப்போகிறது. ஆனால் இ.தொ.காவும் ம.ம.முன்னணியும் தமிழ் மக்களை கொன்றுகுவிக்கவும் அடக்கி ஒடுக்கவும் பிரயோகிக்கும் அவசரகாலச் சட்டம் முதல் அரசாங்கத்தின் எல்லா நடவடிக்கையையும் ஆதரித்தே வருகின்றன. அவை ஆதரிப்பது மட்டுமின்றி மலையகத் தமிழ் மக்களையும், தமிழ் மக்களையும் அரசாங்கத்தையும் ஆதரிக்கும்படி தூண்டிவருகின்றன.

அதேபோன்று ஐ.தே.கட்சி என்னதான் எட்டிஎட்டி மலையகத் தமிழ் மக்களை உதைத்தாலும் அதற்கு அடிமை சேவகம் செய்து வருகின்றனர். வடமேல் மாகாண சபை தேர்தலில் அக்கட்சிக்கு ஆதரவாக ஒழிந்து மறைந்து வேலை செய்கின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஐ.தே.கட்சிக்கும் மட்டுமின்றி இந்நாட்டு மக்களுக்கும் வடமேல் மாகாணசபை தேர்தல் முக்கியமாக்கப்பட்டு விட்டது. பொ.ஐ.ஐ.முன்னணிக்கும், ஐ.தே.கட்சிக்கும் அடுத்த பாராளுமன்ற தேர்தலுக்கு ஒத்திகையாகிறது. இவ்விரண்டு க்ட்சிகளிலும் வெறுப்படைந்து இருக்கும் இந்நாட்டு மக்கள் மத்தியில் சக்திமிக்க அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பி வருகின்ற புதிய இடதுசாரி முன்னணிக்கு அதன் அரசியல் பயணத்தின் ஒரு படியாக இத்தேர்தல் அமைகிறது.

இந்நாட்டில் வாழும் எல்லா தேசிய இனங்களின் தனித்துவத்தை பாதுகாப்பதன் மூலமே அவற்றினிடையே ஐக்கியத்தை கட்டிவளர்க்க முடியும் என்பதை வலியுறுத்தி பேரினவாதத்துக்கு எதிராக வெளிவெளியாக போராடி வருகின்ற ஒரே முன்னணி புதிய இடதுசாரி முன்னணியே ஆகும். வடமேல் மாகாணத்தில் புத்தளம் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தமிழ் தோழர்களையும் உள்ளடக்கி நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளது. குருநாகல் மாவட்டத்தில் தோழர் பெற்றிக் விஜய பெர்ணான்டோவும், புத்தளம் மாவட்டத்தில் தோழர் எல்.சோமவீரட்னசிறியும் தலைமை வேட்பாளர்களாக இருக்கின்றனர். குருநாகல் மாவட்டத்தில் தோழர் கே.கருணாரகரனும், புத்தளம் மாவட்டத்தில் தோழர் குப்புசாமி உட்பட இன்னும் சில தமிழ் தோழர்களும் போட்டியிடுகின்றனர்.

இந்நாட்டில் தேசிய இனங்களுக்கும் முழுநாட்டு மக்களுக்கும் விரோதமான அரசியல் நிலைப்பாட்டை கொண்டுள்ள பொ.ஐ.ஐ.முன்னணி, ஐ.தே.கட்சி என்பவற்றை நிராகரித்து புதிய இடதுசாரி முன்னணியை வெற்றி பெறச் செய்வது சகல மக்களினதும் கடமையாகிறது. குறிப்பாக வடமேல் மாகாணத்தில் தமிழ் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் புதிய இடதுசாரி முன்னணியை வெற்றிபெறச் செய்வதன் மூலம் பேரினவாதத்துக்கு எதிரான அவர்களின் நிலைப்பாட்டை உறுதி செய்வதாக அமையும். சிங்கள மக்களுடன் கைகோர்த்துக் கொண்டு பௌத்த சிங்கள பேரினவாதத்தை தோற்கடிக்க திடசங்கற்பம் கொள்வதாக அமையும்.

# அமைச்சர் அஷ்ரப் கூறும் பேரப் பேச்சு

## அரசியல் தோல்விகண்டதை தூக்கிப்பிடித்துப் பயன் இல்லை.

நாட்டை ஐக்கியப் படுத்தக் கூடியதான இனப்பிரச்சினையைத் தீர்க்க கூடியதான சீரான கொள்கை எதுவும் சுதந்திரக் கட்சியிடமோ ஐக்கிய தேசியக் கட்சியிடமோ வேறு பெரும்பான்மைக் கட்சிகளிடமோ கிடையாது. பதிலாக சமூகங்கள் பிளவுபடக் கூடியதும் தமது சுய நலத்துக்காக சமூகங்களை தூண்டி விடவும் கூடிய பணிகளையே அவை செய்து கொண்டிருக்கின்றன. பெரிய கட்சியளால் நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியவில்லை. குழப்பமடைந்துள்ள அக்கட்சிகளை நாடிப்பயன் இல்லை. இதற்கு ஒரே வழி சிறுபான்மைக் கட்சிகள் பெரிய கட்சியாக மாற வேண்டும்.

மேற்கண்டவாறு அமைச்சர் அஷ்ரப் கூறி இருக்கிறார். பேசும் போது அமைச்சர் அஷ்ரப் அவர்களின் கூற்றில் பெருமளவிற்கு நியாயத் தன்மை இருப்பதை அனேகமான சந்தர்ப்பங்களில் கண்டு கொள்ளலாம். மனிசன் ஒழிவுமறைவின்றி துணிவுடன் பேசுகிறார் என்றும் எண்ணத் தோன்றும். ஆனால் நடைமுறையில் என்ன செய்கிறார். எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதே அவரது துணிவான பேச்சுக்குக்கான உரைகற்களாகும்.

சில காலத்திற்கு முன்பு அமைச்சர் அஷ்ரப் தலைமை தாங்கிய முஸ்லீம் காங்கிரஸ் மாநாட்டிற்கு இரண்டு பேரினவாதப் பெரும் கட்சிகளின் தலைவர்களான ஜனாதிபதியையும் எதிர்க்கட்சித் தலைவரையும் அழைத்து ஒரே மேடையில் இருக்கச் செய்து தான் எந்தப் பக்கமும் போகத் தயாரானவர் என்பதை சொல்லாமல் செய்து காட்டினார். அதன் பின் பொதுசன ஐக்கிய முன்னணியினால் மட்டுமே இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும் என்றும் அடித்துக் கூறினார். தற்போதைய வடமேல் மாகாணசபைத் தேர்தலில் தனித்து நின்று போட்டியிட முன்வந்த போதிலும் இறுதியில் ஜனாதிபதியின் நெருக்குதலுக்குப் பணிந்து பொ.ஐ. முன்னணியின் பட்டியலில் இணைந்து கொண்டார்.

அரசாங்கத்தின் யுத்தக் கொள்கைக்கும் அதற்கு அனுசரனையா்ன அவசர காலச் சட்டத்திற்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிக் கொண்டு வெளியிலே நன்கு ஒழுங்கு படுத்தப்பட்ட கவர்ச்சி மிக்க சொற்றொடர்களில் அஷ்ரப் அவர்கள் பேசிக் கொள்ளுவார். இந்த உத்தி முறையை ஏற்கனவே திரு.தொண்டமான் பயன்படுத்தி வந்த ஒருவராவர். மிகத் துணிவாகப் பேசிக் கொள்ளும் தொண்டமான் செயலளவில் பெரும் பேரினவாதக் கட்சிகளுக்கு அடிபணிந்து போவதையே செய்து வந்துள்ளார். இதனை 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை' என்பதாகவே கொள்ளல் வேண்டும்.

அவ்வாறே அமைச்சர் அஷ்ரப் அவர்களும் ஏதோ அப்படி இப்படி என்று பேசிக் கொள்வார். ஆனால் பதவிகளிலும் சலுகைகளிலும் தமது நிலைகளைப் பாதுகாத்துக் கொள்வதில் மிகக் க்வனமாக இருந்து கொள்வார். தமது அடுத்த இலக்கு பாராளுமன்றத் தேர்தல் என்றும் அதில் 18 ஆசனங்களைப் பெறுவது நோக்கம் என்பதுடன் அதற்காக தேசிய ஐக்கிய முன்னணி ஒன்று அமைத்திருப்பதாகவும் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கூறி இருக்கிறார். அவரது கூற்றுப்படி பார்த்தால் பேரினவாதக் கட்சிகளுடன் பேரம் பேசுவது தான் அடிப்படை நிலைப்பாடு என்பதைப் புரிந்து கொள்ளலாம். இந்தப் பேரம் பேச்சு அரசியல் ஏற்கனவே பல தடவைகளில் தமிழர் கட்சிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு தோல்வி கண்டுபோன ஒன்றாகும். பேரினவாதக் கட்சிகள் அன்று முதல் இன்றுவரை நம்பிக்கை மோசடி செய்து தமிழ் முஸ்லீம் மலையக மக்களுக்கு துரோகம் செய்தே வந்துள்ளன. அந்த வழியில் தான் அஷ்ரப் அவர்களும் செல்வதற்கு முயலுகிறார். குறைந்த பா.உக்கள் இருந்தால் அதற்கு ஒரு வகைப் பேரம். கூடிய உறுப்பினர் இருப்பின் தனிவகைப் பேரம். அப்பேரம் கூட உரிய மக்கள் சார்பானதாக இருக்க முடியுமா? என்பது மிகப்பெரும் கேள்வியே.

எனவே அமைச்சர் அஷ்ரப்பின் புதிய பல்லவியை முஸ்லீம் மக்கள் மட்டுமின்றி அனைத்து மக்களும் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

### இ.தொ.கா.வின்........

1ம் பக்க தொடர்ச்சி.

தோட்டப்புற உள்ளகக்கட்டமைப்பு நிதி ஒதுக்கீட்டை தோல்வியடைய செய்தமைக்கு ஐ.தே.கட்சியின் இனவாதநிலைப்பாடே காரணமாகும். அதனை தோற்கடிக்க பொதுஜன ஐக்கிய முன்னணியின் இனவாதம் காரணமாக இருக்கவில்லை என்றும் கூறமுடியாது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் இனவாதத்தை குறைத்து மதிப்பிடமுடியாது. இ.தொ.கா அதனுடைய இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணியின் இனவாதம் பற்றி பேசாமல் மௌனம் சாதிக்கிறது.

எது எவ்வாறிருப்பினும் இந்த நிதிஒதுக்கீட்டுப் பிரச்சினையால் பல ரகசியங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றன. இ.தொ.கா தலைமைகள் ஐ.தே.கட்சியிடம் பெற்றுக்கொண்ட சலுகைகள் பற்றி ஐ.தே.கட்சியின் தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்திலுள்ள மலையகத் தமிழ் பிரமுகர்கள் பகிரங்க மேடைகளில் தெரிவித்து வருகின்றனர். அதேபோன்று ஐ.தே.கட்சியின் இனவாதம் பற்றி இ.தொ.கா வினர் கூறி வருவது மல்லயகத் தமிழ் மக்களின் வாக்குகளை நம்பியிருக்கும் ஐ.தே.கட்சின் தமிழ்ப் பிரமுகர்களுக்கு மட்டுமின்றி ஐ.தே.கட்சியின் முஸ்லீம் பிரமுகர்களுக்கும் இக்கட்டான நிலைமையை தோற்றுவித்துள்ளது.

இ.தொ.கா வின் ஐ.தே.கட்சி எதிர்ப்பு இயக்கங்களின் நேர்மைத்தன்மைப் பற்றி மலையகத் தமிழ் மக்களிடம் நிலவும் சந்தேகங்கள் இயல்பானவையே ஏனெனில் ஐ.தே.கட்சியுடனான உறவை இ.தொ.கா முற்றாக துண்டித்துக் கொள்ளாது என்பது எல்லோருக்கும் தெரியும். இ.தொ.கா தலைமைகள் அவற்றின் இருப்பை உறுதிசெய்வதற்காகவே எதிர்ப்புகளை காட்டுவது வழமையென்று மலையகத் தமிழ் மக்கள் அறிவார்கள். இ.தொ.கா வின் சில எம்.பீக்கள் ஐ.தே.கட்சிக்கு சார்பான நிலைப்பாட்டிலிருந்து கொண்டு 'மெதுவான' ஐ.தே.கட்சி எதிர்ப்பில் இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற அமைப்பின் அங்கத்துவ தொழிற்சங்கங்கள் பலவும் 'மெதுவான' ஐ.தே.கட்சி எதிர்ப்பையே காட்டி வருகின்றன. ம.ம.முன்னணி யோ ஐ.தே.கட்சியின் இனவாத போக்கை கண்டு கொள்ளாமல் இருக்கிறது.

எனவே இ.தொ.கா வின் ஐ.தே.க. எதிர்ப்பு என்பது வெறும் ஏமாற்று வித்தையே. இழந்துள்ள சரிவை தூக்கி நிறுத்தும் ஒரு சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்துகின்றனர். இதனை மலையக மக்கள் நன்கு அறிவர். ▬

**புதிய பூமி**

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் | – ரூபா 150.00 |
| ஆறு மாதங்கள் | – ரூபா 75.00 |
| தனிப் பிரதி | – ரூபா 10.00 |

வெளி நாடுகள்

1 வருடம் 25 அமெரிக்க டொலர்
(தபால் செலவு உட்பட)

அனுப்பும் முகவரி

E.THAMBIAH
S-47, 3rd Floor,
CCSM Complex,
Colombo 11.

வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட், கொழும்பு 11.
அச்சுப்பதிப்பு யூகேபிரஸ் 26/1, சிவானந்த வீதி, கொழும்பு 13.